981

ஸ்ரீபாண்டுரங்க பரமாத்மனே நம.

பரமசாத்விமணியும் பதிவிரதா திலகமுமான

சக்குபாய் சரித்திர

ஹரி கதை.

இஃது
மத்தூர்-வெங்கடரமணாசார் அவர்களால்
இயற்றியது.

சென்னை,
"முராரி" அச்சுக்கூடத்திற்
அச்சிட்டு பிரசுரம் செய்தது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை) 1927 அணா—4

அலிபாதுஷா சரித்திரம்

(டிராமா) இரண்டுபாகமும் விலை அணா—8.

நண்பர்காள், இந்த அலிபாதுஷா சரித்திரம் இது வரையில் நாடக ரூபமாய் இல்லாததினால் அநேகரின் வேண்டுதலால் சென்னை இந்து விநோத சபா சீனிவாச பிள்ளை கம்பெனியிலும், ஆலந்தூர் ஒரிஜனல் கம்பெனியிலும் நடத்திவருவதை அச்சிட்டிருக்கிறோம், இதில் ஆங்காங்கு தர்க்க காயனங்களும் வசனங்களும் சுலபமாய் பாடுவதற்கும், நாடகம் கற்றுக்கொள்வதற்கும் அனுகூலமாயிருக்கும்படி அச்சிட்டிருக்கிறது.

முதல்பாகம் விலை அணா—4 இரண்டாம்பாகம் விலை அணா—4

சித்திரசேனே பாக்கியானமெனனும் 'காலவரிஷி'

சரித்திரம் டிராமா விலை அணா 0 4 0

இதில் கந்தர்வனை காப்பாற்ற அர்ஜுனன் பிரதிக்கினை செய்வதும், கந்தர்வனை கொல்ல பிரதிக்கினை செய்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் தர்க்கங்களும், ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்களின் சப்த போராட்டமும், காலவரிஷியின் கோபாக்கினியும் மிக ஆச்சரியத்தை விளைவிக்கும், இதே சரித்திரத்தை தெலுங்கில் "கய" சரித்திரமென்று சொல்லுவார்.

அலிபாபா என்னும்

40-திருடர்களின் சரித்திரம் விலை அணா—4

இது பார்ஸி கம்பெனிகளில் நடத்தியதை தமிழில் இயற்றி நமது தமிழ் நாடக கம்பெனிகளில் நடத்தி சகலஜனங்களால் மதிக்கப்பெற்றது. இதில் சகோதரர்களின் பொறாமையும் தர்க்கபாட்டுகள், சிங்காரம், வீரம், சோகம், கருணை முதலிய பாகங்கள் மிக திருப்திகாரமா யிருக்கும்.

அலாவுதீன் அல்லது அற்புததீபம்.

டிராமா விலை அணா—3

இது பொம்பாய் பார்ஸி கம்பெனிகளிலும், ஆலந்தூர் ஒரிஜினல் கம்பெனியிலும், மதுரை பாய்ஸ் கம்பெனியிலும், வி. கன்னையா கம்பெனியிலும் நடத்திக்காட்டியதை யாவரும் கண்டிருக்கலாம், இதை மற்றொருவர் கற்றுக்கொள்ளவும் படிக்கவும் இதுவரையில் அச்சிலில்லாத குறையை நீக்க தற்சமயம் அச்சிட்டு வெளியிட்டனம்.

இங்கிலீஷ் கற்பிக்கும் ஆங்கில ஆசான்

60-நாளைக்குள் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வீர்கள். தமிழ் தெரிந்தவர்களுக்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை 20000 ஜனங்கள் வாங்கிபடித்து பிரக்கியாதி யடைந்தது. விலை ரூபா 2 0

சரீர மர்ம சாஸ்திரம்.

பிரியமாதாகவே சரீர மர்மத்தை தெரிந்து கொள்ளுங்கள் விலை ரூபா—

இதில் ஸ்திரீபுருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும் ஆண், பெண் சிசு உற்பத்தி விபரமும் ஆதியில் எழுதிய இல்லற சித்திரங்களும் அழகிய 64-சித்திரப் படங்களுடன் உள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலிருக்கவேண்டியது.

எமது விலாசம்:— T. ஸ்ரீனிவாச அண்டு கோ.,

நெ. 20 நம்பாள்வார் தெருவு முதல்சந்து சென்னை

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீபாண்டுரங்க பரப்ரம்மணேநம:

பரமசாத்வீமணியும் பதிவிரதா திலகமுமான

சக்குபாய் சரித்திர

ஹரி கதை



இவை

மத்தூர்-வெங்கடரமணாசார் அவர்களால்

இயற்றியது.

டி. செங்கல்வராய நாயுடு

அவர்களால் தமது,

சென்னை,

முரஹரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

இதன் விலை] 1926 [அணா—4

OFFICE OF THE REGISTRAR ... 22 NOV 1927 ... MADRAS

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:— இந்த பரமசாத்வீமணியும், பதிவிரதா திலகமுமான சக்குபாய் சரித்திர ஹரி கதை புத்தகத்தை, மத்தூர்-வெகடாமணுசார் அவர்களால் எழுதப்பெற்று சகல சுதந்திரத்துடன் அடியிற் கையொப்பமிட் டிருக்கும், யான் அச்சிட் கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால்இதிலுள்ள பாட்டுகள் முதலானவைகளை மாற்றி அச்சிடுவாராகில் அதனாலுண்டாகு லாபநஷ்டங்களுக்கு சட்டப்படி வசூல்செய்துக் கொள்ளப்படும்.

இப்படிக்கு,

டி. செங்கல்வராய நாயுடு.

முராஹரி அச்சுக்கூடம், சென்னை.

முகவுரை.

ஸ்ரீயப்பதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதனனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அகில கல்யாணகுண பூஜிதனாய், சர்வ சங்கல்ப சகல குணாதீதனாகி, பக்தானுக்கிரக காரகனாகி, அர்ச்சாவரூபத்தால் அஷ்டோத்திர திவ்ய தேசங்களிலொன்றாகிய திருபண்டரி க்ஷேத்திரத்தின்கண் ஸ்ரீருக்மணி சமேத, ஸ்ரீபாண்டுரங்கனென்று திருநாமத்துடன் கடிஹஸ்தனாகி, கலியைத்தீர்க்கும் கர்த்தனாகிப் புண்டரீகனுக்கருள் புரிய திருவவதாரங்கொண்டுறையும் ஸ்ரீபரந்தாமனின் க்ஷேத்திரமான்மிய லீலைகளிலொன்றாகி அபலைகளாகிய ஸ்திரீகளுக்கும் அனுக்கிரஹமுண்டோ இல்லையோவென சம்சயம்நீங்க, கேவளமென் சிறாரி ஆதித்து கேசவனருளைப் பெற்று கரவீரபுரத்தில் கடிமணமுடித்து, கணவனகத்தில் கவலையிலா இடுக்கண்களிலிருந்து கமலேசனருளால் பண்டரிக்கேகி பவமதையொழித்த பரமசாதுவாகி பதிவிரதையான சக்குபாய் என்னும் பெண்மணிக்குப் பேரின்பகடலளித்து பூடன் சேர்ந்தனாரும் மணம்பெற்றவாறு அம்மாதின் மணவாளனோடினாரும் மங்கையுறை மார்பன் மலரடிநிழலி லமைந்த இத்திவ்ய சரிதயை கதா ரூபமாக இராக தாளங்களமைத்து கீர்த்தனை வசனங்களோடு ஹரி கதா காலக்ஷேபத்திற் கேற்றவாறு அமைத்துளது. இதனின் எவ்வித மான குற்றங்கள் காணினும் இகழாது சீர்திருத்தி ஆட்கொள்ள ஆத்ம ரூபனை அச்சுதன் திருவிளையாட்டானதால் அனைவரையும் பூர்வ முடன் கேட்டுக் கொள்ளுகின்றனன்.

இப்படிக்கு,

மத்தூர் - வெங்கடராமனுசார்.

சாற்றுக்கவி.

ம-ள-ள-ஸ்ரீ தின்னனூர் - பொன்னம்பல முதலியார்

அவர்கள் இயற்றியது.

திருமருவு மணிமார்பன் செங்கண்மா லடிக்கன்பு செலுத்தி நாளுங்
கருமுகிலேன் றுரையென யிர்ங்கவிகள் கழரீ மீண்டு
பெருமைபெரு சக்குபாய் சரிதமெனப் பெயரிட்டோர் நூல்
அருமைமிகுவெங்கடராம னுசாரரைந்தன றதன்பெருமை யளகர்பாற்றே

ஹோர் ஆப்ஸ் டிபோ.,
நெ 56, கிருஷ்ணப்ப நாய்கன் குளத் தெரு, சௌகார்பேட், சென்னை.

அநேகரின் நன்முயற்சியாலும், வேண்டுதலாலும்
இதுவரையில் நாடகரூபமா யிராத

நந்தனார் சரித்திர (டிராமா)

5-ஆக்டுகளும் 16-சீன்களுமுடையது.

இதில் ஒவ்வொரு சீனிலும் ஸ்டேஜியில் நடத்தும்
ஆக்டைப்போல் சீன்விபரமும் திருவுருபடங்கள் சேர்த்திருக்கிறது.

எமது அன்புடைய சிநேகிதர்கள், இந்த நந்தனார் சரித்திரம் இதுவரையில் கீர்த்தனை ரூபமாய் ஸ்ரீமான் பாரதி கோபாலகிருஷ்ண அய்யரால் இயற்றப்பட்டு வழங்கி வருகிறது இதே சரித்திரத்தை நாடகரூபமாய் ஏற்படுத்தி சென்னை, இந்துவிநோத சபா தி. நாராயணசாமி பிள்ளை கம்பெனி ம-ா-ா-ஸ்ரீ கே. சீனிவாசப் பிள்ளை அவர்களாலும், ஸ்ரீகிருஷ்ண விநோத சபா ம-ா-ா-ஸ்ரீ வி. கனையா கம்பெனியாரும் மிஸ்டர் எஸ். ஜி. கிட்டப்பாவினும் ஒவ்வொரு தேசங்களிலும் இந்த நந்தனார் சரித்திரத்தை நடத்தி சகல ஜனங்களையும் ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செய்ததும் தவிர நற்புகழும், கீர்த்தியும், அநேக மெடல்களும் பெற்றிருக்கிறார் என்பது சகல நண்பர்களும் அறிந்தவிஷயமே, ஆகலின் ஷை நாடகத்தை அச்சிலிட்டு சகலருக்கும் விளம்பரமாகும்படி அநேகர் கேட்டுக் கொண்டதின்பேரில் ஷை இரண்டு கம்பெனிகளில் நடத்தி கீர்த்தி பெற்றுவரும் நந்தனார் சரித்திரத்தை நாடக ரூபமாக அச்சிட்டிருக்கிறோம். இதில் நந்தனார் ஒவ்வொரு இடங்களில் சிவபெருமானை தியானித்து பாடும் பாட்டுகள் பரவசமா யிருக்கும். வேதியருக்கும், புலையருக்கும் நடக்கும் தர்க்கம் வெகு வேடிக்கையாயிருக்கும், நந்தனுருக்கும் வேதியருக்கும் நடக்கும் தர்க்கம் வேதாந்த சித்தாந்த இன்ப மொழிகள் மனதைக் கவரச்செய்யும். இப்புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு டிராமா நடத்துவதைப் பார்க்கவும், நாடகம் கற்றுக் கொள்ளவும் வெகு சுலபமானது, இப்புத்தகத்தின் அருமைபெருமைகளை நன்குணர ஒரு புத்தகம் வாங்கி வாசிப்பதே அத்தாக்ஷி.

நந்தனார் சரித்திர டிராமா புஸ்தகம் 1-க்கு விலை அணா—6
புல்புல்அயான் என்னும் பாதுஷா சரித்திர டிராமா 1-க்கு அணா—4

ஸ்ரீமான்- கலியாணசுந்தர முதலியாரால் எழுதப்பட்ட

சீகாளத்தி புராண வசனம்

ஐதீக திருவுருவப் படங்களுடன் விலை அணா—6

உ

சுபமஸ்து.

ஸ்ரீ அலர்மேல் மங்காசமேத ஸ்ரீவேங்கடேச பரப்ரம்மணே நம:

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம சகாயம்.

மஹாசாத்வீமணியும் பதிவிரதா திலகமுமான

சக்குபாய் சரித்திரம்,

ஹரிகதை.

காப்பு.

வெண்பா.

பண்டரியில் வாழ்நாதன் பக்திதனைச் செய்துநிதம்
மண்டலத்தில் பேர்பெற்ற மங்கையெனும்—தன்னுடையொலி
பாதத்தி நற்சக்கு பாய்சரிதை சாற்றதமிழ்
வேதத்தின் பாறனை வேண்டு.

சுலோகம்

விக்னேஸ்வரமுமாதேவீம் மஹாதேவஞ்சபாரதீம்
வாயும்-ர.ஹரிம்நத்வா சதாகாயனமாரபேத்.
என்று சுருதிக்கினங்க.

தேவதாஸ் துதி.

சீசபத்திடம்

ஸ்ரீனிவாச உன்பாதம் சித்தத்தில் வைத்துநான்
ஸ்ரீகௌரி சேயனை சிறப்பாய் போற்றி
ஸ்ரீஉமா தேவியை சிந்தித்து அனுதினம்
ஸ்ரீசாம்ப மூர்த்தியை நமஸ்கரித்து
ஸ்ரீசார தாம்பிகையை சித்தமதில் தியானித்து
ஸ்ரீஆஞ்ச னேயர் சீர்பாதம் போற்றி
ஸ்ரீலக்ஷ்மி தேவியை சிரத்தையாய் போற்றியே
ஸ்ரீவேங் கடேசனின் பாதம் போற்றி.

சிறுவனும் சாமையதாசன் செய்யும்
பருவமாம் பதிவிரதையின் பக்திசரிதை
உறவனு[illegible]த்தோ ருகப்பாய்க்கேட்க
கரியவன் கருணையால் கதையைச்சொல்வான்.

தாண்டவ திருத்தியகரி என்ற வர்னமெட்டு.

பணிந்தோம் பார்த்தருள்வீர் பொற்பாதத்தில் பணிந்
துணிதலாய் சரிதையை தாய்மையுடனுரைக்க
தும்பிக்கையான் பதம் துதித்துநாம் பணிந்
அனிமிஷரெல்லா மன்புடன் போற்றும்
அம்பிகை அரனடியை துதித்துநாம் பணிந்
கலைமகள் மாருதி கமலையும் கண்ணனின்
கமலத்தாள் துதிசெய்வோம் நிதம் நிதம் பணிந்

ராஜன்மைசூர்—ராச என்ற வர்னமெட்டு

நோட்.

இ—ம், மோகனம், ரூபகதாளம்.

1 தேவன் சேஷாத் ரீசஸ்ரீனி வாச
சரணம் சரணம் சரணம் சரணம் தேவ

2 புவன மெங்கும் புகழை சாற்ற
புண்ணிய ரெல்லாம் பூரித்து ேற்ற
சரணம் சரணம் சரணம் ணம் தேவ

3 தாச ரெல்லாம் புகழுஞ் சீலா
ஈசா ஜெக மகிழும் லோலா
சரணம் சரணம் சரணம் சரணம் தேவ

4 அசோதையி னனந்த புத்திரா
ஆசை தீர்க்கு மறுமை பாத்திர
சரணம் சரணம் சரணம் சரணம் தேவ

5 ஸ்ரீசாவெங்கட ரமணன் தாச
நேசாகிருபை தாரும் ஈசா
சரணம் சரணம் சரணம் சரணம் தேவ

புலவர் வணக்கம்.

விருத்தம்

பார்ப்புகழ்முற்புலவரெனும் பாற்சொறிர்வால்மீகர்
பகர்வியாச காளிதாசர்
நேர்நிகரிலாதண்டி நேர்மையுள பவபூதி
நன்னய பாஸ்கருடன்
நார்பெருகுந்திக்கன்ன நன்மைபாணுதிவி
நவிலுமேவோர் நன்மலரடி
நீர்கண்டுசிரங்கொண்டு நீள்பாகவதர்பாதம்
நேர்மைகொண் டோதுவேனே.

கலைமகள் வணக்கம்

இராகம்-சுருட்டி, ஆதிதாளம்

1 வாணீ உனைநம்பினேன் கீர்வாணீ
வனஜாசனன் மருவிய வாணி

ஆணிமுத்தினபணி பூரிபுஸ்தகஆணி
பாணிகுந்தலவேணி யேலோசனிராணி வாணி

ஏது உனக்கென்னுட னிவ்வாது
ஈ தனக் காகாது ஏது
மாதுவாக்கில்திர்ப்பது சாதுனையிப்போது
ஓதுநற்சொற்களுக்கெப் போதுணையிருக்க வாணி

வசனம்

இவ்வண்ணம் இஷ்ட தேவதாதிகளை மனதில் துதித்து இருவழிப் புலவர்களை, இருதயத்தில் பதித்து, இருகரங்களைக் குவித்து, இல்லை வாழ்க்கையிலிது ஒன்றெனை மதித்து, இந்திரேச னிசையெண விதித்து, இயற்றிய, சற்குணவதி சாதுமணியான சக்குபாயின் சரிதை எவ்விதமெனின்.

அவையடக்கம்.

விருத்தம்

ஒப்பிலாபாண்டுரங்க னுகந்ததோர் சக்குபாயின்
தப்பிலாத்தாதைதன்னை தமியனே னுரைப்பதீதை
செப்பமாம்புலவர்யாரும் சேயதினுரைபோலெண்ணி
இப்புவிதன்னிலென்னை இகழ்ந்திடாதிருப்பர்மன்றே

தொஹரா சரணங்கள்

இதுஸ்தான்-ஆதிதாளம்.

பல்லவி

பண்டரிவாசாபண்டரிவாசா பண்டரிவாசாயீசா
பண்டரிவாசாபண்டரிவாசா பாலித்தருள்கிருபையீசா

சரணம்

1 மகிதனில்ஸ்ரீசக்குபாய்சரிதையை மனமுடன்தான்கேட்போர்கள்
அகிலபதவிகட்கற்புமெனுஞ் ஸ்ரீஹரிபாதத்தடைவார்கள்

விருத்தம்

ஜெகமதனிலெத்தனைஞ் செல்வங்கள்செழித்தோங்கச்
செய்திடும் பாம்நீங்க
நிகரிலாநதியொன் நிமலன் பேர்க்கொண்டுறையும்
நிலைமேதயமாபதியென்
றகத்தினில்கிருஷ்ஷியெனு மாற்றோரங் கேவளனன்
நகரதனில்வாம் மறையோன்
அகமதனிலவதரித்தளந்தசக்குபாய்
அருமையுளபல்வியாக.

வசனம்

எத்தலத்திலு மித்தலமே உத்தமமென் றுரைக்கும் கிருஷ்ணா நதிக்கரையோரம், திருமகள் விலாசம்பொருந்திய கீவள நாட்டில் வேதியர்க் குலோத்பன்னரான பத்ம நாபராவ் என்ற பரம சாதுவும், அவருக்கு உத்தமியாகிய ருக்குமாபாய் யென்ற மனைவியுடன் தம்பதிகளிருக்க அன்னவர் கர்ப்ப பயோததியில் அதிசாதுவாகிய பகவத் குணமுள பெண்மணியை பெற்று ஆனந்தத்துடன் வளர்த்து செல்வப் பெயராக சக்குவென திருநாமஞ் சூட்டினர்.

சக்குவென்னும் பதத்தின் பொருள்.

தமிழ்வல்லோர் குழந்தைகளை, கண்ணு—என செல்வப்பெயரிட்டழைத்துப் பின் கண்ணம்மாள் என மருவுதல்போல்-சக்குவென பெயரிட்டு பின் சக்குபாய் என வழங்கி ஐந்து வயதளவில் தன்னிகரான சிறுமிகளுடன் கலந்து விளையாடிக்கொண்டு கிருஷ்ணா நதியிற் செல்ல இவ்வுத்தமியாகிய சக்குவெனும் பெண்மணிக்கு பாண்டுரங்கர் வேதிய குருவுக்கொண்டு திருமந்திர முபதேசித்துச்செல்ல இம்மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சுகத்துடனிருக்க பத்துவயதுள்ள வாலைப் பருவமடைந்தனள்.

தொஹரா

2 சுந்தரமாம்கரவீரபுரந்தனில் சுந்தரராவ்சுஜபாயும்
மந்திரந்தனில்கிருஷ்ணஜிராவெனும் மைந்தனும்மூவருமாயும்

வசனம்

தன் குமாரனுக்கு! வதுவைச்செய்ய நினைத்து தேசங்களனைத்தும் திரிந்து தெரிவையைக் காணமல் திகைத்து தன் நகரம்செல்லக் கருதி யிடையிலுள்ள வூரில் விசாரிக்கத் துணிந்து.

தொஹரா

3 கீர்த்திபெற்றகிருஷ்ணநதியருகினிற் கீவளநகரில்சென்று
சீர்த்தியடைந்தவ்வேதியர்குலத்தில் சிறுமியைகேட்கவேயன்று

வசனம்

அந்நகரிலுள்ள அந்தணர்களை விசாரிக்க அவர்.

தொஹரா

4 பதுமநாபராவென்றொருசாது பாரியாள்ருக்மாபாய்தனக்கு
விதுவெனஉதித்தசக்குபாயென விளங்கிடும்புதல்விநானவர்க்கு

வசனம்

இவ்வித முறைத்ததை செவியுற்ற சுந்தரராவ் அதிகமான மகிழ்சியுடன் பத்மநாபராவ் வளவுக்கேகி அவரால் சன்மானிக்கப்பெற்று ஆபாசம் தீர்ந்து அகமகிழ்ந்து அவரைநோக்கி.

விருத்தம்

மனமகிழ்ந்துரைப்பேன்கேளீர் மைந்தன்கிருஷ்ணராவுக்கு
உனதுநற்புதல்வியாகு மொளியுடைசக்குபாயை
எனதருமகனுக்கீந்து வெழில்மணஞ்செய்யவேண்டி
வனமுடையுந்தனில்லம்வந்தெ நானறிவீரென்றார்.

வசனம்

சுந்தரராவ் உறைத்தமொழிகளைச் சோதித்து, சம்மந்தம்செய்ய மதித்து, சகலமுமாருய்ந்து சக்குபாயைகொடுக்க விதித்து. சர்வமங்களகரத்துடனே பாணிக்கிரஹணமுகூர்த்தம் முடித்து.

விருத்தம்

பாவையைநன்றுடன்னிற் பரிவுடன்புதல்வர்க்கீந்து
ஆவலாயங்காளாதி யைந்துநாட்சடங்குமாகி
மேவினர்தங்கள்நாட்டிற் மிகமகிழ்ந்திருக்குநாளிற்
தேவனைச்சக்குபாயி சிந்தனைமிகவுஞ்செய்வாள்.

இ-ம் கானடா—ஆதிதாளம்.

பல்லவி

பண்டரிவாழ் பரமாத்மசுரூபனே
பாலித்தருள்கிருபை பாண்டுரங்கபூபனே (பண்)

அநுபல்லவி

மண்டலத்திலுன்தாசர் மகிழ்ந்துகொண்டாட
தொண்டரைரக்ஷிக்குந் துரையென்றுபாட (பண்)

சரணங்கள்

கருணாசாகரனென்று காசினியோற்புகழ
கரியைகார்த்தக்கரி வரதனென்றேமகிழ பண்

பரமபக்தருக்காக பார்தனில்நின்ற
பெருமைசேஷாசலேசன் புகழ்தருவேனென்ற பண்

வசனம்

இவ்வாராக பாண்டுரங்கனின் பாதத் தியானஞ் செய்துக்கொண்டு இல்லறப்பணிகளை இடைவிடாது நடத்திக்கொண்டுவரும் இச்சாது மணிக்குவாய்ந்த மாமன்,மாமியார்களின் குணாதிசய மெப்படியெனின்.

வெண்பா

இறப்போர்க்குப்பிச்சையிடா னிம்மகியில்கூழுக்குப்
பறப்போர்க்கன்னமிடாபாவி வெருப்புடனே
உற்றவரைத்தள்ளியகத்துள்ளவரே சொந்தமென்பாள்
சற்றுமரிச்சிந்தைசெய்யா தான்.

வசனம்

இவ்விதமான சத்குணமுள்ள வீட்டிற்கு பரமசாதுவான சக்குபப் மருமகளாகியும், இச்செய்கைகளை யாதொன்றையும் கவனிக்காம் தன் காரியங்களை செய்துக்கொண்டு இல்லறத்தி லெப்பொழுதும்.

வெண்பா

காசினியிற்காமரமே காண்குமோராலயமாய்
தேசுமிகுமொன்சுடரே தீபமென—பாசனத்தால்
உண்டாகுமோசைகளை யோங்குபலவாத்தியமாய்
கண்டனளே நாதனடிகாண்.

குறள்

காட்டமதைநற்றுளவாய் கண்டுதினஞானம்பா
ராட்டித்துதித்திடுவா ளங்கு.

வசனம்

சக்குபாயானவள் தனது இல்லறத்திலே தான் பாகம் செய்வதற் கேற்படுத்திய அடுப்பை, திருக்கோவிலாகவும், அதனுடன் உண்டாகும் கட்டையின்சுடர் தீபமாகவும், அன்னெருப்புக் கணங்களை ஸ்ரீ

பாண்டோங்களைவும், பாகஞ் செய்வதால் உண்டாகும் ஓசைகளை மிரு தங்க தாளவாத்தியங்களாகவும், தான் வைக்கும் சிறுகட்டை துணுக் குகளை திருத்துளாயாகவும் பாவித்து பஜனை செய்துக்கொண்டு பரமா னந்தத்தி லிருப்பாள்.

வசனம்

இத்தகமையாகபாவித்து இந்திரோசனை அர்ச்சித்து இருகரங்களை குவித்துச் சேவித்து ஹிருதய கமலத்தில் பதித்து தியானித்து சிறிது நேரம் சடலம்பரவச மடைந்து மறுபடியும் தெளிந்து.

மரியாத-கா-துரா என்றவர்னமெட்டு.

இராகம்—சங்கராபரணம் தாளம்-ஆதி.

பல்லவி

கிருபை செய்ய வேணுமே கிருபை

அநுபல்லவி

கருணாகரா கமலத்தாள்—போற்றினேன்
தருணமிதுவே தாசரைகார்க்கவே கிரு

சரணம்

தானமும் தவங்களும் தருமமு மறியேன்
கானத்தினு லுமைக் களிப்புறச் செய்கிலேன்
சினியோ முன்னைச் சிந்தனை யல்லால்
நானினி யறியேன் நற்சேஷகிரீசா கிரு

வசனம்

இவ்வாராகவிருக்கும்சக்குபாயின் குணாதிசயங்கள்எவ்விதமென்றால்.

தோஹரா.

5 கணவனிடத்தெதிர் வார்த்தையைச்சொல்லாள்
கடுஞ்சினமௌனமனங் குவியாள்
கணமாவதுபர வளவுக்கேகாள்
கணிகயருடன் சினேகிக்காள் பண்

6 அரிபக்தரைபரிகாசஞ் செய்யாள்
அன்னியருடன்தான் சிறியாள்
அரிவைத்தன் உறவோர்க்கபகீர்த்தி
யண்டிடதான் செயல்புரியாள் பண்

7 பண்டரிபண்டரி பண்டரிரங்கா
பாண்டுரங்க ஸ்ரீரங்கா
விண்டுவைதுதிப்பாள் விகலேவிருதாவாய்
வீணுகாமலே ரங்கா பண்

வசனம்

இன்னும் இச்சாது செய்கைகள் எவ்விதமெனின்.

கும்மி.

ரங்காரங்கரங்கா ரங்காரங்கரங்கா
ரங்காரங்கனே ரங்கனென்று
மங்களமாகவே பொங்கிதுதிப்பாளாம்
மங்கையர்த்தன்னிடர் தீரவென்று ரங்க

1 சக்குநாச்சாரு நீராடும்போதும்
சரசமாய்க்கலேதனே கட்டும்போதும்
சொக்குடன்கஸ்தூரி திலகமிடும்போதும்
சுகமாய்க்கண்ணில் மையைதீட்டும்போதும் ரங்க

2 வேணியில்புஷ்ப முடிக்கும்போதும்
வேகமாய்வேணீ ரெடுக்கும்போதும்
பாணியும்பாகத்தை செய்யும்போதும்—மாது
பாங்குடன்படுக்கையில் படுக்கும்போதும் ரங்க

3 பஞ்சாவஸ்தைதன்னில் பத்தியுடன்
பண்டரிநாதனின் பஜனையுடன்
நெஞ்சில்சேவேஷசனே துதிப்பதுடன்—மாது
அஞ்சலிசெய்ததி ஆசையுடன் ரங்க

வசனம்

இவ்விதமாக சக்குபாயானவள் தன்னுடைய பத்தி நிலேயினின்று சற்றேனும் வழுவாமல் தேகம்மாத்திரம் பதியினுடைய பாத சேவார்த்தமாக இல்லறத்திலும், ஆத்துமாவானது பாண்டுரங்கனுடைய பாதாரவிந்தத்திலும் வைத்து தன் இந்திரியங்களே கிரகத்தில் பரிசாரியாதி பணிகளே செய்துக்கொண்டு வருவதைக் கனவுற்ற மாமன் மாமியார் பர்த்தா, இம்மூவரும் இவளுடைய செய்கைகளே பிரதிதினமும் கண்டு சகிக்காமல் ஆகாராதிகளே குறைத்தும், அதிகமான கஷ்டங்களேக்கொடுக்க, இம்மாது அவைகளில் தன்மனதைச் செல்லவிடாமல்,

மஹாசாத்வீமணியும் பதிவிரதா திலகமுமான,

களங்கமில்லாத நிச்சலபக்தியில் ஒருநாள் வீட்டை மெழுகிக்கொண்டு பாண்டுரங்கனுடைய தியானத்தில் நிமேஷம் பாவசமாயிருக்கக் கண்ட மாமியார்.

தொஹரா

8 அதிசாதுமணிகையிலிருக்கு மகமெழுகும் துணிக்கொண்டு
மதிகெட்டவளொன்றடித்துச்சென்றமண்குடத்துடைத்துக்கொண்டு

திண்டி.

பொற்குடத்தைப்போட் டுடைத்தாள்பொங்கலாக
அற்புதமாயன்னை தந்தாளன்பதாக
தற்பரன்போல் பார்த்திருந்தேன் தத்தியமாக
அற்பப்பெண்ணழிதித்தனள் அனுவதாக. ராம ராம

வசனம்

இவ்விதமாய் வைது அடித்து அனேக துர்பாஷைகளுரைக்க இச்சாதுவான சக்குபாய் எதற்கும் எதிர்க்காமல் எனக்கு இவ்விடர்கள் நேராதிருக்கின் பக்திக்கரையை வழுவுவேனோ! என்று பாண்டுரங்கனே! இவ்விதமாக நியமித்தாரோ என்று மௌனமாய் தன் காரியங்களை தடையின்றி நடத்தி வருவதுமான செய்கைகளைக் கண்ட அயல் வீட்டங்கனையார்கள் தம்மில் ஒருவர்க்கொருவர்,

இந்துஸ்தானி காபி-ஆதிதாளம்

பல்லவி

என்னமனமோயிது எந்திழையர்களே என்

அநுபல்லவி

கன்மனமோகாண்கிலோம் கன்னியைக்கடுமைசெய்ய என்

சரணங்கள்

1 கல்லாகிலும்சற்று கண்டித்தால்கறையுமே
கல்லினைப்பார்க்கதி கடினமுள்ளமனம் என்
2 அயமாகிலும்சிறு அனலிலிட்டுத்தளருமே
அயமதைகாட்டிலு மதிகதீரமுள்ள என்
3 பூசைக்கண்டெலிப்போல புரிகிறாள்தொழிலுத்தமி
சநேசேஷாசலேசனே காரும் என்

வசனம்

புரசனங்கள் தம்மில் ஒருவருக்கொருவர் இவ்வாறு வசனித்துக் கொண்டிருக்க ஒரு சமயம் சக்குபாய் தனித்திருக்கக்கண்டு அம்மணி! நீர் மாமியார் இல்லம் வந்த நாள்முதல் இதுவரையிலும் உம்முடைய ஜன்மநாடேகாத காரணம் என்ன? ஜநநீஜனகர்யார் எவ்விடமிருப்பது என்று கேட்க அவருடன்.

தொஹரா

9 அன்னை ஸ்ரீருக்குமணிதேவி என்னெந்தை
அவனியில் பண்டரிநாதன்
அன்னையேகேளவ ரிருப்பிடம்பண்டரி
அரிவித்தேனவர் வேதன் பண்

விருத்தம்

இத்தரைதன்னிலேதா னென தருதந்தைதாயார்க்
கெத்தனை சுதர்களென்று எண்ணிடவல்லார்தாங்கள்
அத்தனை சுதர்கள்தம்மி லம்மாகேள்மறந்தார்போலும்
நித்தனின்பங்குசெல்வா ரிருக்கிலென்குறைசொல்வேனே.

வசனம்

இவ்வாறுரைத்து இருவிழிகளில் கண்ணீருதிர்த்து, ஈசனைத் துதித்து இல்லறத்திலிருக்கும் சமயம், ஆடிமாதம் பூர்வபக்ஷ ஏகாதசியில் நடக்கும் பண்டரி பிரம்மோற்சவத்தை சேவிக்க, அவனியுறை அகில பாகவத பக்த சிரோன்மணிகள் பிரயாணம் சென்று இச்சக்குபாய் வீட்டின் மார்க்கமாய் பஜனை செய்துக்கொண்டு கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள நந்தவனம் நல்லதென்று நாகரீகமாய் நின்று சிலர் பஜிக்கவும், சிலர் பூஜிக்கவும், சிலர் பாகம் செய்யவும் இருக்க,

தொஹரா

10 பொற்குடம்கொண்டு பெண்துணைப்பற்றி
போனாள்ஜலந்தரநதிக்கு கீழ்தீர்த்தணையிங்குபாடவும்
நன்குளவனத்தி லிருக்கும்பத்தரை
நங்கைகண்டு தன்மதிக்கு ப

கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி

கமலக் கண்ணனே
கமலந்தருன்னருளால் கடத்தைக்கைக்கொண்டேன் கம

பாற்கடல்தனில் துயில்வனே பதுமலோசனனே—பாற்
பாற்கடல்சுதையை மார்தனிலேவைத்து
பார்ப்புதல்வியுடன் பேர்பெற்றதிரு—பாற்
சீர்மிருந்ததிரு சேஷகிரீசனே
நார் உடறுண்டிடும் நங்கையை தருணத்தில் கம

தொஹரா

11 அதிசந்தோஷமா யவ்விடம்சென்று
அரிபக்தியில் மனம்நிற்க
சதியுடனிருப்பதை துணைப்பெண்கண்டு
சூக்ஷத்தை மாமியார்க்குறைக்க பண்

12 மாமன்மாமியார் மகன்தனைக்கண்டு
மருமகள் ரீதியையுரைக்க
பாமரருடன்தான் பண்டரிபோவாள்
பாருன்பாரியை யென்றுரைக்க பண்

அதிவேகமாயவ் வனமதில்சென்று
அங்குதன் மனைவியைக்கண்டு
சதிசெய்வாளிவள் சண்டாளியென
சகிக்காகோபங் கொண்டு பண்

மோகனம்—ரூபகதாளம்

பல்லவி

குலத்தைக்கெடுத்தாய்ச் சண்டாளி நீயேன்
குலைத்துகிற்கிறாய் பெரிஞாளி—அடி குல

அநுபல்லவி

பலமென்னமோகண்டாய் பண்டரியுனக்கேன்டி
பசதத்தாலுதைப்பேன்டி பார்த்தபேர்நகைத்திட கு

சரணங்கள்

மானஹீனமில்லா நாரீ—மனதில்
மமதையென்னமோகொண்டாய் மீரீ
ஈனகுலத்தோருக்கில்லையே யிப்பாரில்
ஈசன்சேஷாத்திரிவாச னடிமீரீ குல

சவாயி

1 பதிவிரதாபத்தியை பாவியறியாமல்
பாரியின்கூந்தலை பற்றியேதான்
அதிகோரமாகவே யுதைத்துகதித்துமே
அடிக்க அப்பக்தரின் மனங்கலங்க ரங்க
2 புரிதனில்மங்கையர் பார்த்துமனம்வாட
புடைத்துபுடைத்துடல் புடைத்தலோடு
துரிதமாயகத்தினில் துணைவியைவிட்டு
துவப்புடன்மூவருந் துணிதலோடு ரங்க
3 பண்டரிபோவாளிப் பாவிபாமாருடன்
பார்த்தபேர்நகைப்பார்கள் பதினொந்துநாள்
சண்டபாயிவட்கு ஊணளிக்காமல்சனுதியில்
சருவரிஅரையின் தம்பத்தில்கட்டும் ரங்க

பிலஹரி-ரூபகதாளம்

பல்லவி

கம்பத்தில் கட்டினார்கள்
கருத்துடனே சக்குவை கம்

அநுபல்லவி

நம்பி ஹரியை துதிக்கவே நாதகதி யென்றிருக்கவே
ஆம்பல்சொல்லி அங்கனை தனை அவர்பிடித்ததி கோபமாகவே கம்

சரணம்

புவியில்பண்டரி நாதனின் பொற்பாதத்தை
போற்றி துதிக்கும் மாதின்
குவித்தலாய்க்கூடி அடித்துமே
கூந்தல்தனையே பிடித்துமே
பவத்தையொழிக்குஞ் சேஷாசலேசனின்
பத்தியென் றறியாமல்வேகமாய் க

தொஹரா

11 மூவருஞ்சக்குவை தூணினில்கட்டிட
முராரிநனை தான்கோரீ
காவல்தனிலேதான் டாவசமடைந்து
கார்க்கவே ரங்கனை ஸ்ரீ பண்

திருசந்த விருத்தம்

உலகுதன்னைநீபடைத்தி யுள்ளொடுக்கிவைத்திமீண்
டுலகுதன்னுளேபிறத்தியோ ரிடத்தியல்லையால்
உலகுநின்னொடொன்றிநிற்க வேறுநின்மையாதலால்
உலகுநின்னையுள்ளசூழல் யாவருள்ளவல்லரே.

நின்னுநம்பினு என்ற வர்ணமெட்டு.

காம்போதி—ஆதிதாளம்

பல்லவி

கதிநீயேகாரும் கமலாக்ஷவாரும் கதி

அநுபல்லவி

விதியில்லைஉனை விடவேரேபாரும் கதி

சரணம்

1 பதிதபாவனனே பக்தரக்ஷகனே
கதிசொல்லிநீயும் காத்தருளயிங்கு கதி

2 சதிசெய்வதினி சாமியுனக்காமோ
மதிதன்னிலுனை மதித்தேன் துதித்தேன் கதி

3 சேஷாசலவாச சேவித்தேனாநீசா
போஷகஞ்செய்யீசன் போற்றினேனுநீசா கதி

அஞ்சனீகீதம் — ஆதி.

பண்டரீசா பாவையானே
பணிந்தேனுந்தன் பாதந்தன்னில்
பாண்டவர்சகாயாஈசா பாண்டுரங்கேசா பண்

தருணியென்னை தண்டிக்காமல்
தனருடன்வைத்தால் தவருவாளென்று
தீரமாய்சிக்ஷைசெய்திறேதான் திருமார்புடையானே பண்

தாணிசேஷாசல ருனிவாசா
தநயனைக்காரும் தருணந்தன்னில்
துரையேபண்டரீபுரியில்வாசா துதித்தேன்சர்வேசா பண்

வசனம்

இவ்விதம் துதித்து சக்குபாய் தன்னை பந்தனம் செய்த தானு தானாக பரவசமடைய,

விருத்தம்.

அயனரி நீலகண்ட ரட்டதிக்பதிகளோடு
நியமதாய்ப் பண்டரிக்குள் நிலைத்தன ரமரரெல்லாம்
பயமிதுவென்றுபாருள் பத்தகோடிகளுந்தங்கள்
நயபரிவாரத்தோடு நாடினர்ரங்கர் நாட்டை

கட்கா.

ரங்க ரங்க	ஸ்ரீ ரங்காவென்று
மங்களமாகப்	பொங்கி துதித்து
செங்கையினில்	கரதாளங்கொண்டு
செய்தசுதியுடன்	தம்புருமீட்டி
காலில்சிலங்கை	கலகலவென்ன
கண்மூடியுடல்	பரவசமாக
ஆலிலைமேல்றயி	லச்சுதனென்று
ஆனந்தமாய்	சேஷேசனைபோற்றி
பயணமாய்	சென்றார் பாரீர்
பண்டரியை	நாடி பய

வசனம்.

இவ்வாறாக, பாண்டுரங்கனுரைப் பண்டரியை நாடி, வேண்டு கோளெல்லாம் விரைவினிலேபாடி வித்தகனென்று விமலனைக்கொண் டாடி சத்தமதுயர சாமிமனம்வாடி இருக்க ருக்குமணி பிராட்டியார்.

கண்ணி

1 காண்டீபனுரைகேட்டோ—மடுவில்
கரியின்முறையைக் கேட்டோ
ஆண்டவனே உமதன்பர்கள்பாடி
ஆடுறுதிதுமட்டோ

2 என்னவிசாரங்கொண்டீர்—புவியில்
ஏதற்புதங்கண்டீர்
சொற்ணகிரியில்வாழ் ஸ்ரீனிவாசனே
சொல்வீர் குக்ஷமதை

வசனம்.

என், இவ்விதமாக பிராட்டியார் வணங்கிகேட்க ரஙகர் புஞ்சிறிப்புடன் ருக்குமணியை பார்த்து நாயகி சொல்வேன் கேட்பாய்.

நாமனவினைவையா என்ற வர்னமெட்டு.

ரூபகதாளம்.

பல்லவி.

நா னுரைப்பதை கேட்பாய்—நீ
நானுரைப்பதை கேட்பாய்—எந்தன்
நாயகி நளினகூடியே—நீ நானு

அநுபல்லவி.

மாசிலந் தன்னிலொரு
மங்கைக்கிடர் செய்தாரதை நானு

சரணம்.

கிருஷ்ணாநதிக்கரையிலுள்ள கீர்த்திநகர்கரவீரத்தில்
விஷ்ணுபக்திசெய்யுஞ்சக்கு வெனும்சாதுக்கிடர்நேர்ந்தன
பக்ஷமுடன்சென்றவளை பரிபாலித்துவரவேணும்
இக்ஷணம்லட்சுமியேநீ பக்ஷ முடன் ரக்ஷைவிடு நா

வசனம்

இவ்வண்ணம் முறைத்து பிராட்டியாரிடம் விடைபெற்று தான் பக்த பராதீனனுகையால் அதிகமான அன்பு கொண்டவருய்.

விருத்தம்

அஞ்சலென்றுரைகார்க்கு மச்சுதன்கருணைகொண்டு
வஞ்சமாய்ச்சக்குவைப்போல் வடிவெடுத்தில்லஞ்சென்று
கொஞ்சியேயழைக்கக்கண்ணீர் குழையின்றபுராளநெஞ்சில்
அஞ்சாமல்பண்டரிக்கு அரிவைநீசெல்வாயென்றார்.

வசனம்

இவ்விதமாய் தன் மாய்கையில் சக்குவைப்போல் ரூபமெடுத்து காவீரபுரத்தை யடைந்து கிஜசக்குவின் வளவிலேகி பண்டரிக்கு வருவாயாவென்று கேட்க கிஜசக்குவானவள் அம்மணி யென்னுடைய பிராணன் பாண்டுரங்கன் பாதத்திலும் சரீரம் இல்லறத்திலிருக்கிறதே நான் என்னசெய்வேன் என்று கண்ணீர் ததும்பி புரளும் சக்குவைப்

பார்த்து சாதுமணி நீ பயப்படாமல் பண்டரிக்கு போவாயென்று சக்கு பந்தங்களை நீக்கி,

(சும்சும்சும்பியாரியெனும் பார்விவர்னமெட்டு) தாளம்-ஆதி.

போபோபோசக்கு பொன்னரங்கன் சேர்வைபார்க்க
பொருந்துவே னுன்னகத்தில் நான்தான்தான் போ

ஆபத்தின்றிநீ யன்னகர்சேர்ந்து
அரிதாசர்களுட னானந்தமாய்

சேவிப்பாய் பாவிப்பாய் செல்வியுடன் பூசிப்பாய்
காவலுடன் காத்திருப்போன் காண்காண்காண் போ

வசனம். இவ்வாருரைத்து ஆசிர்வதித்து மங்களமாய்போய்வருக மென்றுரைத்து சக்குபாயை பண்டரிக்கு அனுப்பிவிட்டு தான் அந்த இடத்திலே சக்குவைப்போல் பந்தமுண்டனர்.

சுருடி -இராம் தாளம்-ஆதி.

பல்லவி.

பந்தமுண்டனள்பாரீர் பவ
பந்தமோசனன் பத்தரை காக்கவே பந்த

அநுபல்லவி.

சுந்தரிபோலச் சக்குவடிவெடுத்து
மந்திரம்தனிலதி மர்மமதாகவே பந்த

சரணம்.

முந்தியசோதைதகையில் முனைந்துகட்டுண்டதைப்போல்
சொந்தமாகபத்தர் செய்யும் பத்திதனிலே
விந்தையதாய் நெஞ்சில் விரைந்துநின்றதைபோல்
சுந்தரஸ்ரீனிவாசன் சுகமாய் சுக்குவகத்தில் பந்த

பார்விசி வர்ணமெட்டு.

பந்தமுண்டான் பாண்டுரங்கன் லகுவாய் பந்த

விந்தைமிகு சக்குவைப்போல்
வேருரு வெடுத்தவள்போல் பந்த

செந்திருகடாக்ஷம்பெற்று செகமெங்கும்போற்ற
இச்செகமெங்கும்போற்ற முச்சகமெங்கும்போற்ற
சந்ததம்முனிகள் செய்யுஞ்சாதனையிலே
சாதனையிலேயோக சாதனையிலே
அந்தரங்கத்துள்ளுரையு மாத்மருபனே இங்கு பந்த

வசனம்

இந்தவிதம் தான் சக்குபாயிக்காக பந்தமுண்டு தன்னால் அனுப்பிய விஜசக்துவானவள் அர்த்தராத்திரி காலத்தில் மார்க்கத்தில் பயமின்னதென்று தெரியாமல் நதேக தியானமாய்,

திருச்சந்த விருத்தம்

தூய்மையோக மாயினைய் துழாயலங்கன் மாலையாய்
ஆமையாகி யாழ்கடற் றுயின்றவாதி தேவ—நின்
நாமதேய மின்னதென்ன வல்லமல்ல வாகிலும்
சாமவேத நேனாய சக்ரபாணி யல்லையே.

அங்கமாறும் வேதநான்கு மாகிநின்ற வற்றுளே
தங்குகின்ற தன்மையாய்த் தடங்கடற் பணைத்தலைச்
செங்கண் ணாகணைக்கிடந்த செல்வமல்கு சீரனாய்
செங்கவண்ண மன்னமேனி சாரங்கபாணி யல்லையே.

தாளம் ஆதி

பல்லவி

வனந்தனிலே சென்றாள் சக்குபாய்சார் வன

அநுபல்லவி

மனமதில் ரங்கனை மகிழ்ந்து துதித்து வன

சரணங்கள்

கனமுள மிருகங்கள் கண்டடி வணங்க
இனமுடன் பரவைகள் இரங்கனை துதிக்க வன

கனமுள் தருக்கள்முதல் காட்டுக் கொடிகளெல்லாம்
அணிவுகொண் டவ்வழிவிட்டு துரத்தி லோடிட வன

சான்றோர் புகழ்ந்திடும் சேஷாச லேசனை
நன்ற சேய்தணையா ஸ்ரீகிருஷ்ணத்தினி லென்று வன

தொஹரா.

14 பண்டரிபோகவே பயணமாய்சக்கு
பாரவனங்களை கடந்து
தண்டலைதனிலுடன் பரவசமாகவே
தரிசனமீந் தரிமனாந்து பண்

வசனம்.

இவ்விதம் சக்குபாயானவள் அர்த்த ராத்திரியில் கொஞ்சமேனு மஞ்சாமல் நெஞ்சில் ரங்கனை பஜித்துக்கொண்டே பெருத்த மரங்க ளடர்ந்த கானகத்தில் செல்லுங்காலத்தில் கருணைசாகரனை பாண்டு ரங்கன் சோதி மின்னலைப்போல சொரூபத்தைக்காட்டி மறைய சக்கு பாயானவள் சொரூபத்தை கண்டு மருபடியும் காணாததால் கவலையுற்று அங்குள்ள தருமிருகாதிகளைக் கண்டு,

தங்கம் பாட்டு.

1 சவரியினங்களே சாதுகரடிகளே
கவரிமிருகங்களே நீங்கள் கண்ணனை காட்டுங்களோ

2 கரிகளே புலிகளே கண்டீரங்களே
நரியினக் கூட்டங்களே நீங்கள் , நாரமரிதனை காட்டுங்களே

3 அன்னப்பரவைகளே அரிவுள்ள கிள்ளைகளே
பன்னகக் கூட்டங்களே நீங்கள் பாண்டுரெங்கனை காட்டுங்களே

திருவாய்மொழி.

புகழுநல் லொருவனென்கோ பொருவில் சீர்பூமியென்கோ
திகழுந்தண் பரவையென்கோ தீயென்கோ வாயுவென்கோ
நிகழுமாகாச மென்கோ நீள்சுட ரிரண்டுமென்கோ
இகழ்விலிவ் வனைத்துமென்கோ கண்ணனைக் கூவுமாரே.

கண்ணனெம் மாயனென்கோ கார்க்கடல் மேனியென்கோ
விண்ணவர் பெருமானென்கோ விசும்பினிற் சோதியென்கோ
தண்துழாய் மார்பனென்கோ தரணியை யாள்தோனென்கோ
கண்ணிநேர் வினையைநீக்கும் நாரண பாண்டுரங்கா.

பங்கயத்தாள னென்கோ பற்பலத் தோற்றனென்கோ
செங்கையை யிடையில்வைத்த செங்கதிர் முடியனென்கோ
அங்கமாண்ட தனில்வந்து அருளினப் பொருளுமென்கோ
செங்குசங் காத்தானென்கோ செல்வனென் ரங்கருனே.

வசனம்.

இவ்வண்ணம் வனத்திலுள்ள தருமிருக பக்ஷிகள் முதலானவை களை கேட்டும் தன்னுடன் ஒன்றும் வாய்திரவாதிருக்க, அதிகமான மனவியாகூலத்துடன்,

பெரிய திருவந்தாதி.

பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ
மற்றயா ராவாரு நீபேசில்—என்றையோ
மாயமா மாயவனே மாயமுலை வாய்வைத்த
நீயம்மா காட்டு நெறி.

தாசராஜ ராஜ ராஜ அடலராஜஹோ என்ற
பார்ஸி வர்ணமெட்டு) தாளம் ரூபகம்.

பல்லவி.

பாண்டுரங்கா யெங்குசென்றீர் பக்ஷித்துரங்கா —என்னை
ஆண்டருள யிந்த ஆரண்யந் தன்னிலே
அதிர்ஸ்யரூபமாய் ஜகம்புகழ் பா

பார்தனி லெல்லோரும் பக்தபராதீனறென் றமைபோற்ற
கார்முகில் வேணியாள் கற்புநிலைகார்க்க கலைகளைந்திரே

தீர்த்தத்தினில் கூவினகரி தீவினையை தீர்த்தாய்
ஆர்த்தியெனும் பாலகனை ஆதரவாய் காத்தாய்
பார்த்தனிடர் தீர்த்தாய் யப்பாண்டவர் குறைதீர்த்தாய்

கீர்த்தியை நேர்த்தியாய்தோத்திரம்செய்ய
உன்மூர்த்தியை காண்கிலேனே
உன்மூர்த்தியை காண்கிலேனே பா

வசனம்.

என்று துதித்து ரங்கனை பஜித்துக்கொண்டுச்செல்ல ஞானோதய மானதைப்போலும், பாவங்கள் நீங்கிய பரிசுத்த மானதைப்போலும் கீழ்த்திசையில சர்வஜகத்திற்கும் சாக்ஷியாய் விளங்கும் சூரியோதய மாகத் தான் சரியான மார்க்கத்தைக்கண்டுச் செல்ல.

(இகயாலனே யெனும் ஜாவளி வர்ணமெட்டு) தாளம்-ஆதி.

ரங்கநாதனே எங்குசென்றாய் மங்களாங்க தேவனே ரங்
மங்கையாளும் மனம்திகைத்து இங்கு தனித்தேனே ரங்
அரிவையா ளனுதினமும் முறையிட்டேனே நானே ரங்
தரையில் சேஷாசலவாசனே. தருணம்என் கர்த்தனே ரங்

வசனம்

இவ்விதமாக ரங்கனைத் தேடிக்கொண்டு பண்டரிக்ஷேத்திரத்தைச் சேர்ந்து அவ்விடத்தில் அங்காங்கு பஜனை செய்துக்கொண் டிருக்கும் பக்த கோடிகளுக்கு வந்தனம்செய்து பீமாநதியில் ஸ்நானஞ்செய்து கோவிந்தநாம சங்கீர்த்தனத்துடன் சந்நதியில் சென்று பாண்டுரங்க ருக்கு பக்தியாக அர்ச்சனுபிஷேகங்கள் செய்து கமலத்தாள்களைக் கைகொண்டு.

இந்துமுகி என்னும் ஜாவளி வர்னமெட்டு.

பல்லவி

பண்டரீசா பாதம்பணிந்த
பாவையைக் காரும் ஆபாங்கத்தை தீரும்
அபாங்கத்தைத் தாரும் என்—ஜெபங்களைத் தீரும் ஓபண்

அஞ்சவயதுதன்னி லென்னை யாட்கொண்ட தேவா
தஞ்சமென்றேன் பொற்பாதத்தில் தருணமிதைக் காவா
நான்—புறையிட்டேன் வாவா ஓபண்

அன்னை தந்தையும் நீரேயென்று அண்டினே னும்மை
தன்னந்தனி லென்னைவிட தருமா உமக்கு—நான்
தனிமையா யுமக்கு ஓபண்

ஈசாசேஷாசல நிவாச இன்பமாய்க் காரும்
ஸ்ரீசாவெங்கட ரமணைதாச நேசாகிருபை தாரும்—நீர்
நேயமாய் வாரும் ஓபண்

இராகம்-பைரவி தாளம்-ரூபகம்

பல்லவி

பண்டரிபுரவாசா யென்னைப் பாதுகாத்தருள்வா யீசா பண்

அநுபல்லவி

எண்டிசையுனை புகழும் பக்தரை
கண்டுநீ தந்தாய் சுகக்ஷேமம்
சண்டமா யீந்தாய் மோக்ஷம் பண்ட

சரணம்

என்றனுருமுனை துதித்துக்கண்டேன்
இந்நாளிலுன்சேவைக் கொண்டேன்
என்ன சொன்னாலும் போகேன் பதிபதி
மன்னனே சேஷாசலேசா
மன்னிப்பாய் சர்வேசா பண்ட

திருவாய்மொழி.

பொன்னிசூழரங்கமேய பூவைவண்ணமாயகேள்
என்னதாவியென்னும் வல்வினையினுட்கொழுந்தெழுந்
துன்னபாதமென்னநின்ற வொண்சுடர்க்கொழுமலர்
மன்னவந்துபூண்டு வாட்டமின்றியெங்குநின்றதே.

கண்டுகொண்டென்கைகளார நின்திருப்பாதங்கள்மேல்
எண்டிசையுமுள்ளபூக்கொண் டேத்தியுகந்துகந்து
தொண்டரோங்கள்பாடியாடச் சூழ்கடன்ஞாலத்துள்ளே
வண்டுழாயின்கண்ணிவேந்தே வந்திடகில்லாயே.

சக்கரத்தண்ணலேயென் தாழ்ந்துகண்ணீர்ததும்பப்
பக்கநோக்கிநின்றவர்தேன் பாவியேன்காண்கின்றிலேன்
மிக்கஞானமூர்த்தியாய் வேதவிளக்கினை—யென்
தக்கஞானக்கண்களாலே கண்டுதழுவுவனே.

(ஹைமூலம்குதர்த்தம் என்னும் பார்ஸி வர்ணமெட்டு) தாளம்—ஆதி.

ஜன்ம மெடுத்தது போதுமே இனி
ஜகத்தி லினிமையாய் நான் ஜன்ம

மன்னனைசெய் மகிபனே
குன்மவினை கொய்து காத்தருளு மிந்த ஜன்ம

பாதத்தாணை வல்லேன்—உனை
பாதத்தானை வல்லேன்—என்
பாதத்தாலில்லம் செல்லேன்
சேதிச்சொல்ல கில்லேன்—நான்
செய்திடுங்காரியம் தள்ளேன்
நாதா வேதா நீதா மோதா
வேதனையே தேகத்தை விட்டிடுவேன்
ஸ்ரீதா ரங்கா ரங்கா ஜன்ம

தொஹரா

15 ஆனந்தத்துடன் பாண்டுரங்கனை
ஆலிங்கனஞ் தான்செய்து
ஆனந்தனிடவடிதனில் ஜீவனை
அன்புடன்விட்டாள் நொய்து பண்
16 அரி அர்ச்ச சகறப்பிணமதைகண்டு
அந்தணர்களை வரவழைத்து
பரியுடன்வெளி கோபுரத்திலிச்சவத்தை
பாவமுடன் தான்வைத்து பண்

விருத்தம்

அந்தணர்விதியைப்போ லவ்வரிவையாள் சவத்தைதொட்டு
விந்தைநீராட்டித்தேரில் விடுத்தவன்னகரைச்சுற்றி
முந்தியாபரணமாடை முழுதலுமெடுத்தாற்றோரம்
இந்தநற்சடலம்வைத்து எறிதணல்மூட்டினரே.

வசனம்

இவ்விதமாக சக்குபாயிக்கு தகனகிரியைகளை முடித்து, மீவள நகரிலுள்ள பிராம்மணர்கள் இச்சாதுவினுடைய ஆடையாபரணங்களைக் கைக்கொண்டு,

தொஹரா

17 சக்குபணிகளை வேதியர்கொண்டு
சங்கதிமாமிக் குரைக்க
அக்கரையுடன் வர்பயணமாய்சென்றார்
அரிஅங்கனந் தானிருக்க பண்
18 பண்டரிஉற்சவம் பதினைந்துதினம்
பாங்குட னைதின்பின்பு
கண்டனர்மூவரும் கதவைதிறந்து
கட்டினிலிருக்கவே அன்பு பண்
19 தருதண்டனைநான் விதித்தேனுனக்குத்
தருணீயினிமேல் சரியாய்
தருகாரியங்களை செய்திருப்பாய்நீ
தகுந்தபடியே நெரியாய் பண்

20 சொன்னதைகேட் டம்மாயாசக்கு
சொக்கியே தலைதனையாட்ட
அன்னமேயெனவரிந்து வழித்து அகமதில்
வேலையைக் காட்ட — பண்

மாயாசக்கு மனதில் நினைத்தல்.

கட்கர.

கருணையதின்றிக் கண்மறைவானால்
கண்மனியாஞ் சக்குக்கிடர்வருமென
பொருமைக்கொண் டகமொழுகிப்பாகத்
தருசவையுடன் செய்ததைமுதலோர்க்
கருத்துடனளித்தக் காந்தையருந்திக்
கனிவுடன் தாம்பூலங்களையீந்து
அருமைபெருமைகளை அன்புடன்காட்டியம்
மாயாசக்கும் மாதிரியிருந்தார்
என்றுவிந்தைக ளிதைக்கேளீர்
எங்கையுங் காணுதென்று.

வசனம்

பாண்டுரங்கர் இவ்விதமாய் கரவீரபுரத்தில் இருக்க, பண்டரி க்ஷேத்திரத்தில் அனேககோடி பக்தஜனங்கள் அரியின் கல்யாண குணங்களை பஜனை செய்துக்கொண்டு பீமா நதிக்கரையை நீங்கி ரங்கருடைய சந்நிதியில் பஜனை செய்துக்கொண்டிருக்க ஒருநாள் ரங்கரை விட்டுப் பிரிந்த பிராட்டியார் அனுக்கிரகத்தால் பக்தர்களனைவருக்கும் ஒருவாராக மனவருத்தம் காண இக்காரண மின்னதென்று புலப்படாமல் சிந்தாக்கிராந்தராய் அனைவரும் ஒருமனதாய் பாண்டுரங்கரை ஸ்தோத்திரம் செய்ய, பிராட்டியார் காம் முயலாது காரியம் நடக்காது என்று ஒரு சாதுவின்மேல் ஆவேசம்போல் தோன்றி அரிபக்தஜனங்களைப்பார்த்து.

இராகம்-சுருடி தாளம்-ஆதி.

பல்லவி

பாகவதரே கேளும் ஸ்ரீபாண்டுரங்கர் தானும் — பாக

அநுபல்லவி

வேகமதாய் சக்கு வீட்டினில் நின்றார்
ஆகையினா லவ ளிங்கில்லை சென்றார் — பாக

சரணம்

பதிசக்குவை யன்று ஸ்ரீபண்டரிக் கேகுமென்று
அதிகோபமாய் பதி அப்பன்தாய் மூவரும்
சதியைத்தூணில் கட்டச் சக்கு துதிக்கவரும் பாக

பண்டரிக்கனுப்ப ரங்கன்சென்று பாவைகட் டவிழ்தானன்று
மண்டலம்புகழ அம் மங்கைவடிவமாகி
சண்டமாய்க் கட்டுண்டார் சக்குவகத் தேகி பாக

கம்பத்தில்கட்டவிழ்த்தார் காந்தைக்கு கருத்தாய் பணிநேமித்தார்
நன்புட நகத்தினில் நாள்சென் றிருக்கிறார்
நம்பினால் சேஷாசல நாதன் வருகிறார் பாக

விருத்தம்

பக்தரே கேளுமிப்போ பாங்குடன் ரங்கர்தானும்
சக்தியாய் சக்குவீட்டில் செய்கிறார் பணிகளெல்லாம்
பக்தவத்சலனே இந்த பண்டரி வரவே கேளீர்
முக்தியா ளஸ்திதன்னை முதமுடனெடுப்பீர் நீரே.

வசனம்.

என்று பிராட்டியாருரைக்க அனைவரும் ஆச்சரியமுற்று அவ்வாறே ஆவேசரூப பிராட்டியார் திருவடிகளை வணங்கி,

விருத்தம்

அப்படிச் செய்வோமுன்ற னடியிணை சரணமம்மா
எப்படித் தெரியுமந்த ஏந்திழை யஸ்தியென்ன
செப்பிடும் ரங்கனென்றுச் செவியினில்வைத்தா லதனை
ஒப்புட னெடுப்பீரென்ன உளமகிழ்ந் தேகினாரே.

வசனம்.

இவ்வாருரைத்ததைக் கேட்டனைவரு மொன்றாய்,

இராகம்-சுருடி, தாளம்-ஆதி.

பல்லவி

தேடியெடுப்போம் வாரீர் நாம் தேடி

அநுபல்லவி

தேடியெடுப்போம் வாரீர் தெரிவையா ளஸ்தியை
நாடிபீம நதி நற்கரைதனில் சென்று தேடி

6-8-1986 11979

பக்தியில் கரைகண்ட பாக்கியி நக்கத்தை
பக்தியுடனே நாதம் பார்த்துபார்த்து நாம் தேடி

ஆசையுடனே திரு சேஷாச லேசனை
நேசமுடன் மனதில் நேயமாய் துதித்துநாம் தேடி

வசனம்

இவ்விதம் பக்தகோடிகள் பீமாநதிக்கரையில் எங்கெங்கு தேடியும் காணுமல் மனசஞ்சலமுற்று, கடைசியில் அங்கு புலப்பட்ட ஆலமாத்தருகில் உள்ள அஸ்தியை யெடுத்துபார்க்க,

சுவரஜதி இராகம்-பிலஹரி தாளம்-ஆதி.

சங்கரங்கா ரங்காபண்டரி
ரங்கா கருணனந்த ரங்க ரங்கனே ரங்க

ரங்க நாதா மங்க ளாங்கா
ரங்கனே பக்ஷிது ரங்கனே ஓ ரங்க

விட்டல விட்டலனே ஜெய ஜெய
விட்டல விட்டலனே
விட்டல ரங்கா விண்மணி அங்கா
விட்டல ரங்க ரங்கனே ஸ்ரீ ரங்க

வசனம்

இந்தவித ஒலியைக் கேட்டு அதி ஆச்சரியங் கொண்டவராய்! ஆனந்தத்துடன் அவ்வொலியுள்ள வஸ்திகளை ஒன்றையும் விடாமல் கைக்கொண்டு ரங்கருடைய சந்நதியில் வைத்து அப்பக்தகோஷ்டிகள் எல்லாரும் மகா பரிசுத்தமான மனதுடன் பஜனை செய்வார்.

இராகம்-ரூபகம்.

பல்லவி

இதுசமய மையா இந்திரேச சங்கையா இது

அநுபல்லவி

விதிமூதலான விண்ணோர் துதிக்கும்
வித்தகனே யித்தருணம் மூத்தியான வத்தருள இது

சரணம்

மண்டலத்தி லுன் மகிமை யெங்கும்
தொண்டர் புகழ்ந்து தோத் தரிக்க
கண்டோ மானந்தம் கொண்டோ மின்று
நண்புற்றிருகண் பார்த்தருள் நம்பினேனும் சேஷகிரீசா இது

வசனம்

இவ்வாறு துதிக்க சிலையைப் பெண்ணாக்கிய சாந்தரசத்தையும், கர்ணனை கார்த்த கருணாரசத்தையும், பிரகலாதனை கார்த்த பரிதாப ரசத்தையும், ஒன்றாய்ச் சேர்த்து சக்குபாயென்னும், பரமபக்த சிகாமணியின்மேல் தெளிக்க தூங்கி விழித்தவள்போல் எழுந்து,

இராகம்-காம்போதி தாளம்-ஆதி.

பல்லவி

வந்தனள் - சக்கு

அநுபல்லவி

வனிதைவர பண்டரி புரத்தில்வந்து இறந்து
அனலில் வெந்ததின்பின் பஸ்தியி லிருந்தெழுந்து வந்

சரணம்

எந்தவித மெனிலதி அந்தமாய் சுந்திரமுடன்
கந்தர்ப்பன்தனை பழிக்கும் விந்தை விந்தையாய்
செந்தாது பொம்மைசரீரம் சந்திரமுக வதனம்
சந்தமாய் சந்தனம்பூசி உந்தல்மிகவாய் உகந்து வந்

மஞ்சள் கஞ்சிகைதரித்து அஞ்சனம் விழியிலிட்டு
வஞ்சியான னத்தில்திரு சூரண மிட்டு
கஞ்சதளன்னான் சதிதந்த மஞ்சமஞ்சகளை பூட்டி
கெஞ்சில் அரியைதுதித்து நேர்மைசெய் தன்புதொட்டு வந்

வரபண்டரிபுரத்தில் பாகதியான பின்பு
அரனுடன் வேருரு யவதரித்து
தரணி புகழும் சேஷாசல வாசனை
சரணென் றடிபணிந்து சேர்வையை பார்த்தது வந்

தொஹரா

21 அரிவையெழுந்தப் பக்தகோடிகட்
கானந்தமா யடிபணிந்து
அரியை துதிக்கையில் ருக்மணிதேவி
அன்புடன் பிரசன்னமாய்வந்து பண்

வசனம்

சாக்ஷாத்காரமாய் தனக்கு எதிரில் பிரத்தியக்ஷமான பிராட்டியாரை வணங்கி,

எபுடு கிருபகல்குனு—என்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி தாளம்—ஆதி.

பல்லவி

பதுமமலர் லோசனீ பரந்தாமன் பிரியராணீ பது

அநுபல்லவி

துதியிது கார்த்தருள் தருணிநானுந்தன் பொருள்
பதிவிட் டுன்பாதமலர் பற்றினேன் பரிபாலிப்பாய் பது

சரணம்

அன்னைமுத லுறவோர் அனைவரும் நீயேயென்று
பின்னையொருவரை நான் பிதற்றிலேன் பேதையின்று
உன்னையே நம்பினே னுலகவாழ்க்கையில் சென்று
என்னை கைவிடலாகா ஏமகிரீசன்ராணீ பது

வசனம்

இவ்வாறு அனேகவிதமாய் துதித்து பாதத்தாட்களில் சரணமடைந்த சக்குவை பிராட்டியார் தன்னுடைய கமலக் கரங்களா லெடுத்து அஞ்சவேண்டாமென்று அமுத நீரூட்டி,

விருத்தம்

பாவைநீபாண்டுரங்கர் பத்தியைமுழுதும்கண்டாய்
மேவினாய்சுவர்க்கம்மீண்டு மேதினிநுருவமானாய்
தாவிசெய்சபதம்போச்சு தருணியுன்னில்லம்சென்று
சேவித்துன்பதியோர்க்கெல்லாம் செவ்வையாய்யிருப்பாய்தானே.

வசனம்

பிராட்டியா ரருளியப்படியே சக்குபாயானவள் அதி சந்தோஷத்துடன் தன்னுடைய நகரம்வர பிரயாணமாய் நடந்து கிருஷ்ணாநதி சமீபம்வர.

தொஹரா

22 கமலாக்ஷரிந்து கடத்தைக்கைக்கொண்டு
கமலத்தைத்தர களிகூர்ந்து
நிமலனுங்கிருஷ்ண நதிகரைவரவே
நிஜசக்குவை தான்பார்த்து பண்

எந்தனேவர்னிந்துநெசெலி என்னும் ஜாவளி வர்னமெட்டு

இராகம்-ரூபகம்

பல்லவி

என்னவென்றுரைப்பே னம்மணீ உங்கள் பெருமை என்

அநுபல்லவி

முன்னருளிய ரங்கனும்மை
இன்னுனி ஷிவ்விக்தை செய்ததை என்

சரணம்

எந்தஜென்மத்தி லெந்தன் பூசையோ
சொந்தமனையில் வந்தெனக் கிந்ததீ ரயயந் தென்

அன்னைக் காகினு மத்புதத்துட
னென்னை கார்த்திட்ட புண்ணியமுனக் கென்னுள தென்

மன்னனைசெய்யும் மாதின் பிழையை
கன்னிலையுரை பொன்மலையோன் பெண்ரூபமோ என்

வசனம்

அம்மணி தாங்கள் யார் பெற்ற கண்மணியோ! எவர்கொண்ட பெண்மணியோ! எந்த ஜென்மாந்தரத்தில் உமக்கு மெனக்கு மேற்பட்ட சம்மந்தமோ! இந்த ஜென்மத்தில் இவ்வாறாக தாங்க ளென்னுடைய பவபந்த விமோசனம் செய்யக் கருதி வந்தது. எந்த ஸரோவரியேன்! தாங்கள் வாஸ்தவ்யமாய் பூலோகத்துரை பூவையரென எனக்குத் தோன்றவில்லை. ரங்கனே! இங்கு அங்கனை வடிவெடுத்தாரென

புலப்படுகிறது. ஏனெனில்? நான் ஜனனமுதல் இதுகாலவரையில் தங்களைப்போல தயாளமுள்ளவரை இத்தலத்திலொருவரையுங் காணேன் அதிலும் தாங்களெனக்குச் செய்த உபகாரத்திற்கு பதில் என்ன செய்யப்போகின்றேன். என் சக்தி ஏதோ சாஷ்டாங்கமாக தண்டம் சமர்ப்பிக்கிறேன், என் றடிபணிய அம்மாயா சக்கு, இம்மானினியை கையாலெடுத்து கண்ணீர்களை துடைத்து அம்மணி,

மாயாசக்குவுக்கும் நிஜசக்குவுக்கும் சம்பாஷணை.

தாளம்-ஆதி.

மா-ச. பண்டரிஉற்சவம் — பக்தகோடிகளுடன்
பார்த்திரு — குறைநீர்த்திரு 1

நி-ச. பண்ணியதவத்தாலும் — பாக்கியவசத்தால்
பார்த்தேனே — குறைநீர்த்தேனே 2

மா-ச. மண்டலம்புகழ்ந்திடு — மகிமையைகண்டுமன
மகிழ்ந்தோங்கனை — புகழ்ந்திரு 3

நி-ச. எண்டிசையோர்களி — லீசனைகண்டுமன
மகிழ்ந்தேன்ரங்கனை — புகழ்ந்தேனே 4

மா-ச. அங்கபுளகாங்கிதமாக — ரங்கன்சேவை
ஆச்சுதோவினை — போச்சுதோ 5

நி-ச. அங்கஜன்பிதாவா — லனுப்பியதங்களா
லாச்சுது — வினைபோச்சுது 6

மா-ச. மங்கைருக்மணிமார்பன் — பதத்தில்மனம்
நின்றதோ — முறைவென்றதோ 7

நி-ச. செங்கமலத்தாள் — சேவையிலென்மனம்
சென்றது — முறைவென்றது 8

மா-ச. கமலக்கண்ணனுரைத்திடுங் — காக்ஷியை
கண்டிரு — சுகம்கொண்டிரு 9

நி-ச. கமலோத்பவியுன் — கருணையாலனைத்தும்
கண்டேனே — சுகம்கொண்டேனே 10

மா-ச. செல்வியேஉன்னைகம் — செல்வாய்நீசுக
ஜீவியாய் — சிரஞ்சீவியாய் 11

நி-ச. வல்வினைபோக்கிஅன் — வரமருள்வீர்விசு
வாசமாய் — வெகுநேசமாய் 12

தொஹரா

23 அங்கனைபதந்தைவணங்கி அபயமென
அச்சுதன் கருணையைக்கொண்டு
மங்களமுடன்தன் ரூபத்தைகாட்ட
மாதினி சிரமேற்கொண்டு

பாசுரம்

ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை
பாரினில்பாதமூலம் பற்றிலேன்பரமமூர்த்தி
காரொளிவண்ணனே என்கண்ணனேயான்கதருகிறேன்
ஆருளர்களைகனம்மா அரங்கமாநகருளானே.

இராகம்-வராளி, தாளம்-ஆதி

பல்லவி

பொன்னடிக்கேசரணம்—உன் பொன்னடிக்கேசரணம் ஓ
பன்னகசயனமே பாண்டுரங்கா—உன் பொ

அநுபல்லவி

உன்னதமானஉன் ரூபத்தைக்கண்டேன்
பொன்னுலகோர்க்கப் புகழ்மிகக்கொண்டேன் பொ

சரணம்

அங்கமாண்டுதனி லருள்செய்தமுறையே
ஆமோதமாய்நித மன்புடன் துதிக்க
அங்கமென்னைப்போ லவதரித்தீர்
அடியாளென்றிங் கனுவல்கள்புரிந்தஉன் பொ

கணவனுக்குக் காதலிசெய்பணிகளை
கவனமாய்செய்ததி களிப்புடனிருக்க
மணிமிகுமுற்சவம் பார்த்துவரும்போது
மாவுடன்நின்ற திருமாலேஉந்தனிட பொ

பத்தர்களையுமுந்தன் பாதத்தைக்கண்டபின்
பதியில்லம்சென்றுநான் பணிசெய்யவேண்டேன்
இத்தரைபுகழ்சேஷாசல மதில்வாசனே
இனியாகிலுமென்னை மன்னித்தருள்புரிவீர் பொ

வசனம்

என்று பொற்பாதத்தி லடைக்கமான சக்குவைபார்த்து ரங்கர் கண்மணி நீபொன்னுக்கு மஞ்சவேண்டாம் உனக்கருள்புரிவேன் உன்னால் சில விசேஷம் நடக்கவேண்டியது, ஆகையால்! நீ இத்தீர்த்த கடத்தை கைக்கொண்டு வளவுக்கேகி காரியங்களைச் செய்வாயென் றருளிய ரங்கர் பண்டரிசேர்ந்தார். சக்குபாய் தீர்த்தத்தைகொண்டவளாய் தன்னில்லம்சேர்ந்து சமபல்செய்புங்காலத்தில் பண்டரியில் சக்குபாயை தகனம் செய்புங்காலத்தில் கைக்கொண்ட ஆடையாபரணாதிகளுடன் வேதியர் கரவீரபுரத்தை யடைந்து சுந்திராராவ் வீட்டைச் சேர்ந்து சக்குபாய் மாமியார், மாமன் இவர்களுக்கு இச்செய்தியை தெரிவித்து அவளுடைய ஆடையாபரணங்களை கொடுக்க, வாங்கிக்கொண்ட மாமியார் அவ்வேதியரைப் பார்த்து,

விருத்தம்

அந்தணருரைக்கக்கேட்டென் [illegible]கத்தில்சேய்ம[illegible]விருக்க
விந்தையாயுரைத்தீரையா விபரம்யான்காணே[illegible]ன்று
அந்தமாயகத்திருக்கு மழகியையழைத்துக்காட்ட
சிந்தையில்விந்தைகொண்டு சிலமொழிக்கூறுவாறே.

பகருவோம்கன்றுய்க்கேளும் பண்டரிபுரத்திலுள்ள
நிகரிலாபீமாநற்றில் நிச்சயம்தகனஞ்செய்தோம்
தங்கயொடுபணிகளாதி தந்திடகொணர்ந்தோமிந்த
மகிதலம்தன்னில்ரங்கர் மலரடியாணையென்றார்.

வசனம்

இவ்வாறுரைத்து, வேதியர் கேவளம் நகரான தம்முடைய நாட்டைநோக்கிச் சென்றபின் சக்குபாய் தரித்திருக்கும், ஆடையாபரணத்திற்கும், வேதியர் கொடுத்ததற்கும், ஒற்றுப்பார்க்க லோகமாதாவானவள் தந்த பணிகளுக்கு யாதொரு வித்தியாசமான பேதமில்லாமலிருக்க சக்குபாயைக்கண்ட மாமியார் ஓ பக்தசிரோன்மணி! நீ பயப்படாமல் நடந்தசங்கதிகளை பாண்டுரங்கன் சாக்ஷியாகப் பகருவாயென, மாமி நீர் பாண்டுரங்கனை சாக்ஷிவைத்தபடியால் சொல்லுவேன் கேட்பீர் என்று,

தா ழிசை

அஞ்சுவயது குழந்தைதன்னில் அரியையானுந் துதிக்கவே
அச்சுதன்தா னன்புகூர்ந்து அந்தணர்போ லாகியே
நெஞ்சிறங்கி கிருஷ்ணையாற்றில் நிற்கயானுஞ் செல்லவே
நிமலனெட் டெழுத்தெனக்கு நியமமாக சொல்லிதா
னஞ்சலென்று சென்றபின்ப னேக்நாள் துதிக்கவே
அன்புகூர்ந்து மூவருண்டில் அரிவையுருவங் கொண்டுதான்
வஞ்சிநீ யரங்கன்றன்னை வணங்கிவாவென் றனுப்பஅவ்
வாலயத்தில் சென்றென்னவி யகலச்செய்தெ னம்மணி

வசனம்

அம்மணி! எனக்கு ஐந்தாவது வயதளவில், என் நிகரான சிறுமிகளுடன் கூடி விளையாட்டுக்காக கிருஷ்ணாநதி மணற்பாங்கிடங்களில் சென்று வேடிக்கையாக விளையாடிக்கொண் டிருப்பதுவழக்கம். அவ் விளையாட்டுக் காலங்களிலும், ஹரியினுடைய நாமத்தையே இடைவிடாது பஜித்துக்கொண்டேயிருப்பேன்,

இவ்வாறிருக்க, ஒருநாள் பாண்டுரங்கர் வயதுமுதிர்ந்த பிராம்மணரைப்போல் வடிவெடுத்து நாங்கள் விளையாடிக்கொண் டிருக்குமிடத்திற்குவர இவரைக்கண்ட இளஞ்சிறுமிகள் பயந்து ஓடினார்கள். அச்சமயம் நான் தனித்து அவ்விடம் நிற்க. அவர் என்னைத் தழுவி பயப்படவேண்டாமென் றுதாவுக்கூறி, அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து, ஆசிகூறி, அம்மணி! இதை நீ எப்பவும் பஜித்துக்கொண்டிரு என்றுரைத்து மறைந்தனர், அந்நாள்முதல் நான் அம்மந்திரத்தை இடைவிடாது ஜபித்துக்கொண்டுவர, இந்த பதினெட்டாவது வயதில் என்மேல் கருணைக்கொண்டவராய், என்னைப்போல் பெண்ருபத்துடன் என்னைத் தாங்கள் பந்தனஞ்செய்த இடத்திற்கு வந்து பெண்மணி! நீ பண்டரிக்குச் சென்று ரங்கனைச்சேவித்து வருவாய் என்று அமுர்தமொழிகளுரைத்து, அப்பந்தங்களைக் களைந்து செல்லவிட்டு தான் அப்பந்தங்களை அணிந்தார். அந்நிசிகாலத்தில் யான் பயமின்றி ஆரண்ணியத்தில் சொல்லுங்கால் ஆத்மரூபனை தரிசித்து அருணோதயத்தின்பின் பண்டரி க்ஷேத்திரத்தைச் சேர்ந்து அவ்வாலயத்தில் என் ஆவியை அகலச்செய்தேன். இவ்வளவிற்கும், தாங்கள் எனக்கிட்ட வாதை நிர்ப்பந்தங்களே காரணம், ஆகையால் எனக்கு தங்களைப்

போல பரம உபகாரமானவர்கள் இத்தரணியில் ஒருவருமில்லை, தாங்கள் எனக்குச்செய்த இவ்வரிய சகாயத்திற்கு எதிர்மாறுச்செய்ய சக்தியற்றவளா யிருக்கிறேன் ஆகிலும் என் சக்திக்கேற்றது சரணாகதியென்று மூவர்களையும் வலம்வந்து பாதத்தில் வணங்கினாள்.

பொது வசனம்

இவ்விதம் விசேஷங்களுரைத்து, தங்களுக்கு மேலான உபகாரிகளில்லையென்று கண்ணீர்த் ததும்ப பாதத்தில் தண்டாகாரமாக வணங்கி மூவரடிகளையும் ஆனந்த பாஷ்பமாகிய கண்ணீரால் பரிசுத்தஞ் செய்யுங்கால், மூவரும் தேகத்தில் பிரக்ஞையற்றி சித்திரபதுமைப்போல சிறிதுநேரமிருந்து, தெளிவுள்ளவராய் இவர்கள் இருகரங்களாலும் அடியினை வணங்கிய அம்மாதினை யெடுத்தாக் கண்ணீர் துடைத்து அம்மணி! பின் விஷயங்களை பிறளாதுரைப்பாய் என்றுரைத்தார்.

வசனம்

பின்பு, பிராட்டியாரான ருக்மணிதேவியால் உயிர்பெற்றெழுந்து இவ்விடம் வரும்போது இதுவரையிலும் என்னைபோல்உருமாரி இங்கு பணிகளைச் செய்துக்கொண் டிருந்த பாண்டுரங்கர் தீர்த்தத்தை தருபவர்போல் வந்து ஆற்றோரம் என்னைக்கண்டு சம்பாஷித்து, தீர்த்த பாத்திரத்தை யென்கையில் கொடுத்துத் தான் பண்டரி சென்றார், தங்களைப்போல் பாக்கியசாலிகளும் புண்ணிய புருஷர்களும் யாரிருக்கிறார்கள். ஏனெனில் பாண்டுரங்கன் பணிவிடைச் செய்யவும், அவர் கையால் செய்த பாகமதை அருந்தவும் பலிதமுள்ளவர்களில்லை என்றுரைக்க மிகவும் பயம்கொண்ட மாமன் மாமியார்,

விருத்தம்

அம்மணிபாபிமிக்க வடிவேங்களொருநாளேனும்
இம்மையாய்பாண்டுரங்கர் இணையடிதுதித்திலேமால்
எம்மையுமருள்செய்தந்த யிறைவனை துதிக்குமாறு
செம்மையாய்புரைப்பாயென்று சிறுமியைவணங்கினாரே.

வசனம்

இவ்விதம் வணங்கிய மாமன் மாமியார் பார்த்த இவர்களைப்பார்த்து இவர்களுடைய மூடமதி நீங்கி நன்மதியாய் பகவத் பக்தியுண்டாம்படி ஹரி குபேபதேசம் செய்கிறாள்.

வெண்பா

ஆக்கமனைமக்களாதி யெமதென்பீர்
ஆக்கமுரிலைவையுந் தாமன்றோ—நோக்கிவை
மித்தையெனக்கருதி வித்தகனெம்மான்பதத்தை
நித்தந்துதித்திடுவீர் நீர்.

வசனம்.

அதிகமான ஆசையால் வீடு தனம் மக்கள் இவைகளெல்லாம் என்னுடையதென்றே உரைப்பீர், அதுகள் நீர் தூங்குங்காலத்தில் உமக்குச் சம்பந்தமுண்டா! கவனித்துப்பாருங்கள், ஏனெனில் இவைகளெல்லாம் பரம புருஷனின் சங்கல்பமான மாய்கையன்றி வேறொன்றுமல்ல, ஆதலால் அம்மாய்கைக்கு ஆதாரமான பரம்பொருளை பஜனைசெய்துகொண்டிருந்தால் அவ்வெல்லனும் மாய்கை நம்மைத் தொடாமலிருக்கும்,

வசனம்

இத்தகைமையான பிரபஞ்சவாழ்கை இன்னுமெவ்வித மெனில்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

மானிலத்தனில்தோற்றமாகும் வத்துகளெலாம்
  மாறிவிடும் மாகையல்லோ·
மாந்தரிப்பொய்யதனை மெய்யெனக்கருதிமெய
  மயங்குவா ரஞ்ஞானியாய்
நானெனுந்தேகமதிலுள்ள காற்றதுபோக
  நாறுமுடல் னதுக்கிறை
நமன்றனக்குயிரத்தி சாங்கவிக்குணவாடை
  நாவிதனே காழியர்க்கோ
சனமோயுயர்த்தொழிலொ எவ்விதத்திலோதேடி
  இட்டபொருள் தாணிக்கிறையே
இயற்றிடுங்கருமமதில் பிள்ளையிடுபிண்டமே
  இயல்பாக காக்கைக்குணு
தானியம்மனைவிமனை தருணமதிலுலகோர்க்கு
  தானென்று மடைவதில்லையே
தாசரதிபாதத்தை நினைவோடுதுதிசெய்யில்
  தப்பாது பேரின்பமே.

வசனம்

அப்படிக்கு துதிசெய்து பக்தியைக் கொள்வதெவ்வித மென்றால்.

இராகம்—புன்னாகவராளி, தாளம்-ஆதி.

பல்லவி

செய்யும்வித முரைப்பேன் ஸ்ரீதரன்பக்தி செ

அநுபல்லவி

பொய்யா னுடலெடுத்து போற்றும் விதிவிடுத்து
உய்யும் வழிதடுத்த உலகோர்களை யடுத்து செ

சரணங்கள்

ஆகமங்க ளீனத்து மனேகமா யுரைத்தவழி
ஏகமாகி யெண்ணிநர தேகங்கொண் டவர்க்குஇது
கிலாக்கியம் நல்ல யோக்கியம் உங்கள்பாக்கியம்
சொல்லும் வாக்கியம் கொண்டு செ

சிந்தையை நிர்மலமாக்கி சந்திராதியை யடக்கி
மந்திரமு மில்லமோன மந்திரத்தாலே ஜபங்கள்
பண்ணுவீர் பாதம் நண்ணுவீர் யமுத முண்ணுவீர்
அரியை யெண்ணுவீர் உள்ள செ

காமாதிகளை ஒட்டிக் கோமானெனும் மனம்நாட்டி
பூமாது நாதனை பூட்டி ஏமாறுமை லுட்கண்ணாலே
பாருமே அது நாமே வேத சாரமே
வினை தீருமே உங்கள் செ

பத்திவழியிலே மனம் பத்தலட்டாமல் திருத்தி
சித்திசெய்து காணபதல்லோ முத்தியருள் சேஷகிரி
வாசனை செய்யும் பூசனை சர்வேசனை
தாச நேசனை நீங்கள் செ

இத்தகைமை பத்திதனை நித்தியமும் செய்துக்கொண்டு
முத்தி யடைவீர்களிதில் பத்தியம்பணமு மிதற்
[illegible] செலவில்லையே வெகு தொல்லையே
[illegible]ல்லையே நிதம் செ

வசனம்

இவ்விதமாய் ஹரிதோபதேசம் செய்ததைக் கேட்டு பேரிருள் நீங்கி சூரியோதய மானதைப்போல் ஞானோதயமாகி, சக்குபாயின் முகாரவிந்தங்களை நோக்க ருக்குமணி சமேதரான ஸ்ரீபண்டரீநாத னிருப்பதாய்த் தோற்ற அச்சரணார விந்தங்களுக்கு பிரதக்ஷண நமஸ்காரம் செய்ய சாதுமனமிளகி திருமந்திரோபதேசம் செய்தாள்.

இராகம்-தன்னியாசி, தாளம்-ஆதி

பல்லவி

உபதேசித்தனள் சக்குபாயி உயர் திருமந்திரத்தை உப

அநுபல்லவி

தபரிஷியாம் நாரதமுனியெப்பவும்.
தவறவிடாத திருமந்திரத்தை உப

சரணம்

துருவபிரகலாத ருக்குமாங்கத பீஷ்மரும்
துரோபதிதும்பி சுசாமிளசுகரும்
திருமந்திரமெனு மெட்டெழுத்தாமது
தீனரக்ஷகஸ்ரீனிவாச னடிதுதியை உப

வசனம்

இவ்விதமாய் உபதேசித்த அஷ்டாக்ஷர மந்திரத்தை அன்புடன் கைப்பற்றி, அக்ஞான மென்ற மந்தகாரம் நீங்கி சம்சாரமென்னும் சாகரத்தைத் தாண்ட ; ஓடத்தைத்தாங்கி, தனமகமெல்லாந் தானதர்மஞ்செய்து, கோவிந்தநாம பஜனையுடன் குவலயத்தை நீங்கி பண்டரிக்கேக பயணமாய்,

(இந்துஸ்தானி வர்ணமெட்டு) தாளம்-ஆதி.

மகானுபாவ ஸ்ரீதரா யனேககோடி நாமனே
உசாந்தகால சேஷனே உபேந்திர இந்திரசந்திரனே
நகாதிபன் துதித்தவேத நாதகீத மோதனே
நாதருக்குமணி நரசிங்கரூபனே அரி

முகுந்தனே வைகுந்தனே
கோவிந்தனே ஸ்ரீரங்கனே
ஏக ரூப பாண்டுரங்க
எங்களை நீர்காத்தருள் மகா

கட்டளை கலிப்பா

மாதவாச்சுதசிதரா திரு மாலெபண்டரிநாதனே
மாயாபஞ்சவர்கேயநற்றுணாய் மாலைபூண்டமலர்மது
சூதனுபயமென்றதம்பியைச் சோர்விலாதருள்வரதனே
சுரர்களுக்கனுகூலவின்மணி சோதிரூபாரிவாமன
சாதனுந்தாற்றன் றிற்சேரூன் றிடும் ஜலஜலோசனதேவனே
சங்கமேந்தியகண்ணனேனந்த சயனவைகுந்தவாசதா
மோதராநரசிங்கதிருமகள் மோகஅரவணை செல்வனே
முத்திதாயகமூர்த்தியாண்டருள் முரகரிரங்கநாயகா.

வசனம்

இவ்விதம் பஜனை செய்துக்கொண்டு பண்டரிக்ஷேத்திரம் சேர்ந்து பாபங்களை போக்கி, பரிசுத்தஞ்செய்யும் பீமநாற்றில் ஸ்நானஞ் செய்து பரிசுத்தாளாய்,

இராகம்-தன்னியாசி, தாளம்-ஆதி.

பல்லவி

பண்டரிக்ஷேத்திர தரிசனமா மெந்தன்
பாபங்களெல்லாம் விமோசனமாம் பண்

அநுபல்லவி

அண்டரண்டம்புகழ் அவனியில்சீர்மிகக்
கொண்டபாண்டுரங்க னண்டியிருக்குந்திரு பண்

சரணம்

எண்டிசைபுகழ்ந்திட தொண்டரைகார்க்கும்வே
தண்டனென்றுபோர்க் கொண்டவனிருக்குந்திரு பண்
ஈசனென்றம்சர் வேசனென்றம்ஸ்ரீனி
வாசனென்றுநாமம் வழங்கிடும்ரங்கனுரை பண்

வசனம்

க்ஷேத்திர நரிசனமானதும் அங்காங்கு பஜனை செய்துகொண்டிருக்கும் அனேககோடி பாகவதர்களைக்கண்டு பிரார்த்திக்கிறார்கள்.

இராகம்-காபி, தாளம்-ரூபகம்

பல்லவி

பணிந்துநின்றேன் நான்
பாகவதரின் பாதத்தாட்களை பணி

அநுபல்லவி

பணிந்து துதித்தேன் பாகவதர்களை
ணிமிகுபண்டரிபுரிவாழ்
பாண்மையுள்ளசாதுக்களை பணி

சாதுக்களைக்கண்டால் சகலமுந்தீருமென்
றோதும்வேதமொழி யுண்மையைக்கண்டுமென்
பாதகத்தைதீருமென்று பாதந்தனில்தண்டனிட்டேன்
மாதவனென்ஸ்ரீனிவாசன் மலரடியைதுதிசெய்து பணி

வசனம்

தன்னுடைய பாபங்களை நீக்கி பரிசுத்தனாக்கி, ஆட்கொள்ளும்படி பாண்டுரங்கருக்கு உறைசெய்ய வேண்டுமென பக்தகோடிகளைப் பார்த்துவேண்டிக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால்,

தான் பரந்தாமனை துதிக்க பாகவதரை வேண்டிக்கொள்வானேன் என்றால், ஜனனாதி இதுகாலபரியந்தம் எம்பெருமான் நாமமின்னதென்றறியாமலும், தானதர்மமில்லாமலும், மகா பாபியாயும், பரம சாதுவான சக்குபாயிக்கு அனேகவிதமான இடர்கள் செய்ததைக் குறித்து பகவான் தன் வேண்டுகோட்களுக்கு இறங்குவாரோ! இல்லையோ! என்னும் சந்தேகத்தால் முதலில் பக்தகோஷ்டிகளனுக்கிரகம்பெற்றால் பகவதனுக்கிரக மதிசுலபமாய்ப் பெறலாமென உறுதிக்கொண்டவராய் வணங்கினார்.

தில்லாந்திரி தில்லாந்திரி தில்லாந்திரி தில்லாம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி

உரைசெய்குவீர் உதவியாக
உயர்பாகவதர்களே உரை

புரைபொருத்தெனை யாட்க்கொள்ள
புகல்வீர்பாண்டு ரங்கர்க்கே உரை

1 சத்தானதை செய்தறியேன் சாதுக்களை சேவிக்கிலேன்
அத்தனென்ற வடிபணியா அரும்பாவிஞனேன் உ

2 தானதர்மம் நானறியேன தவங்கள் செய்துமறியேன்
ஈனனே யீடேறவும் இணையடியை துதித்தேன் உ

3 மேதினியிலுமை போற்றியே மேன்மையானர் ஜனங்கள்
ஆதிசேஷகிரியோனென்னை யாட்க்கொள்ள நீன்ற உ

வசனம்

அரிதாசர்களுடைய ஆக்ஞையை கைக்கொண்டவராய் அதிஆனந்தத்துடன் கரதாளம் கொட்டிக்கொண்டு சந்நிதியைநோக்கிசொல்லுங்கால்.

இங்கிலீஷ் நோட்.

பாண்டுரெங்க ரங்கனே பாலித்தருள் துரங்கனே பாண்

பாண்டவர் சகாயனே பத்மாவதியின் பார்த்தனே பாண்

பக்தவச்சல தேவனே பக்தகோடி பாலனே
புக்திமுக்தி கர்த்தனே புவனசேஷாசு லேசனே பாண்

வசனம்

இவ்விதம் அத்யானந்தமாய் பஜனை செய்துக்கொண்டு சந்நிதியைச்சேர்ந்து ரங்கரை தரிசித்து துதிக்கிறார்.

இராகம்-தோடி, தாளம்—ஆதி

பல்லவி

தேவா உன் திருவடிகளேசரணம்
தேவர்புகழும் திருபண்டரியில்வாழ் தேவ

அநுபல்லவி

ஆவலுடனே உமை — அன்புடனே காக்கவே
காவலென்றோம் — கலிதனைதீர்க்கவே
மேவலாய்நம்பினோம் — மேதினிமகிழவே
பாவமுந்திரவே — பதிதராயாகவே தேவா

சரணம்

தாசர்களை காக்கவே தயவுடனே — தரணிதன்னில்
தசாவதாரங்களெடுத்துடனே — தரிசனமுமீந்து
நேசமாய்த்தர்மங்களை — நிலைகாட்டினீர்
கேசரிரூபமும்கேண்மை — யாய்க்காட்டினீர்
வாசகனென்று — வண்மையாய்ச்சென்றீர்
சேஷகிரீசனுய்ச் — சிறப்புடன்நின்றீர் தேவா

நாதர் தர்தீம் - என்றவர்ணமெட்டு.

தில்லானா

பாண்டுரங்காபதுமநா — பணையித்தகி
பக்ஷம்வைத்தாலக்ஷமியுடன் — பக்ஷிவாகனுரக்ஷியும் பாண்
ஆண்டருள்புரியுமாதி — மூர்த்தியே
அகிலபுவனமாதார — சக்த்தியே
பாண்டவர்கள் பக்ஷா திரு — பங்கயக்கண்ரங்கனே
பஞ்சாயுதபாணியே — தஞ்சமென்றோமும்மையே
செஞ்ச மி நங்கி வா — கஞ்ச மலர்பாத பாண்

வசனம்

இவ்வாறனேகவிதமாய்த் துதிக்க ரங்கர் ஜூமோதிக்காதிருக்க அங்கம் பரவசமாய் அனைவருமொன்றாய்,

தண்டகம்

ஸ்ரீ பண்டரிவாச — ஸ்ரீபாண்டுரங்கேச
ஸ்ரீபக்தபோஷேச — ஸ்ரீபார்க்கவிநேச
மாநிலந்தன்னிலுன் — மகிமையைக்கேளாது
மானிடச்சன்மத்தை — மாற்றத்தெரியாத

பாமரத்தோர்களை பாதுகார்த்தவர்களின்
காமமப்படிகளை கருத்துடன்தந்தருள்
மச்சமாய்ச்சென்று மச்சோமுகந்தனைவென்று
இச்சையாய்மறையன்று இன்பமாய்தந்தவா
ஆமையின்வடிவாகி அசலத்தைமுதுகினில்
அன்புடன்சுமந்துஉன் ஞண்மைமிகக்கேண்மையே
பன்றியாய்ச்சென்றுஹிர ண்யாக்ஷனைவென்றுநீர்
நின்றதோர்த்தூணில்நர சிங்கமுகமாய்வந்து
ஹிரண்யகாஸ்யபந்தன்னை ஹிதமதாயதமாக்கி
சரணென்றதாசனின் சஞ்சலந்தனை தீர்த்து
வாமனரூபமாய் வந்துபலிதனைவென்று
ஏமமாய்ஸ்ரீபரசு ராமரூய்வேந்தரின்
சக்திக்குறைத்தாரன்முக்திக்கு மூதலான ஸ்ரீராமரூபமாய்
அகலியின்சாபத்தை அன்புடன்தீர்த்தவா
உலகமதில்பலராம ஞருவமதைநீர்கொண்டு
பார்தனில்பௌத்தனாய் பூதனியைவென்றமா
பேர்பெற்றகல்கியாம் பிரியமுளாநவதாரம்
சேஷாசலந்தன்னில் திரமதாய்நின்றஉன்
தாசாதிதாசரை தக்ஷணந்தனில்கார்க்க
பத்துவிதரூபமும் பற்பலமுளநாமம்
நித்தியமாய்கொண்டுமின் நிலமதனில்நின்ற ஓ
ரங்கனேவிட்டலா ரங்கனேபண்டரி
ரங்கனேஜகன்மோக ரங்கனேயித்தருணம்
கருணைகூர்ந்தருள்புரிக் கமலநிகர்க்கண்ணனே
சரணமிருபாதத்தி லடைக்கலம்சேர்ந்தனம்

வந்தனம்! வந்தனம்!! வந்தனம்!!

எண்சீர் ஆசிரிய விருத்தம்

படியாதமூடனாய் பக்தரிடங்குரூரனாய்
பாமரனென் பாவமுருவாய்
பார்தனிலுதித்து மென் பதியிலுறைபதிவிரதை
பால்மொழியாஞ் சக்குவுக்காய்
நாடியகாப்பணிகடனை நாடோரம்செய்தமுதம்
நல்கியெங்களை கார்த்தும்
கங்கையெனாகளிருடன் நாகரீகமுமாகை
நாட்கள் சூழவைந்தில்தந்து

வடிபாதபவக்கடலை வடித்துநெறிவழிகாட்ட
வந்தெனுன் பக்கலின்று
வாசுதேனாசனே வனஜமகள்நேசனே
வைகுந்த சர்வேசனுன்
கொடியாடமாயையிக் குவலயம்விட்டோட
கோவிந்தனெனும் பேரொலிக்
குமரிடஉன்பொற்பாத குளிர்நிழலைதந்தருள்
கோபால பாண்டுரங்கா.

பெரிய திருமொழி

தாயேதந்தையென்றுந் தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தே னுன்னைக்காண்பதோராசையினல்
வேயேபூம்பொழில்சூழ் விரையார்திருபண்டரிவா
நாயேன்வந்தடைந்தே னல்கியாளெனையாட்கொண்டருளே.

மானேய்க்கண்மடவார் மயக்கத்திற்பட்டுமாநிலத்து
நானேநானாவிதநரகம் புகும்பாவம்செய்தேன்
தேனேய்பூம்பொழில்சூழ் திருபண்டரிவாழும்ரங்கனே
ஆனாய்வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே.

பற்றேலொன்றுமிலேன் பாவமேசெய்துபாவியானேன்
மற்றெலொன்றறியேன் மாயனேயெங்கள்மாதவனே
கற்றேன்பாய்ந்தொழுகுங் கமலச்சுனைபண்டரிவா
அற்றேன்வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே.

வசனம்

இன்னுமெவ்விதமாய் துதிக்கிறாரென்றால்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

பாராதியண்டமுதல்பார்க்குமெவ்வத்துகளும்
படைத்தநீர் பிரம்மமாகி
பற்பலமுன்தோற்றமோ டைந்தரிவனைத்தையும்
பதுமநாபராய்க் கார்ப்பதும்
சேராதசேர்க்கையுஞ் செய்விப்பதல்லாது
சேர்ப்பதேமுடிவிலரனாய்ச்
செய்யும்நின்வினையாட்டு செய்கைதானின்னதென
செப்பசேஷனும் வல்லனோ
தீராதவினைதீர்க்குந் தீனரக்ஷகனாகி
தியாகிகளி னெண்ணம்போல
தேவதாருபனாய்ச் சகமெங்குங்கொண்டாடும்
தேஜோ விசேஷனே

நேராகயெச்சமயந்தன்னில் நீநிலைநின்ற
னேகரூபனே நாமனே
நின்னருள் தந்தருள் நின்மலமாய்பண்டரிவாழ்
நிமலனே பாண்டுரங்கா.

வசனம்

இவ்விதமா யிவரொருமனதாய்த் துதிக்க, பாண்டுரங்கர், இவர்களுக்கு பரமபத மளிக்கக்கருதி பார்ப்பவரெல்லாம் பிரமிக்க, பக்தர்கள் மனங்களிக்க, பக்தகோடிகள் துதிக்க, பரமதயாளுவாய் நிசரூப தரிசனந்தந்து இந்நால்வருக்கும் அழியாத சாயுச்சியமெனும் பரமபத மளிக்க அந்தரத்திலமரர்கள் அரவிந்தமோடு கர்ப்பகமலர்கள் தூவ பாண்டுரங்கர் மறைந்தனர்.

இச்சாதுமணிச்சரித்திரத்தை பக்தியோடு
படனசிரவணஞ்செய் பவர்களுக்குபாண்டுரங்கர் அழி
யாதபக்திமுக்தியையளித்து தத்பாதநிழலைத்தந் தருள்வார்.

தோஹரா

24 பக்தியுடனேயிச்சக்குபாயிகதை பார்தனில்கேட்டிதைபடித்தால்
முக்திதரும்திருசேஷகிரீசர் மும்மதிசம்பிரேணர்க்கிருப்பார்.

விருத்தம்

கண்ணனே களபமார்பா கமலமுன்னீலமேக
வண்ணனே சலசைமோகா வனசபொற்பாதபோகா
பண்ணவர் துதித்துயோகப் பாதையில்கானுமோகா
பண்டரிப்பாண்டுரங்கா பாதுகார்ஏனதுரங்கா.

மங்களம்

இராகம்-சௌராஷ்ட்டகம்; தாளம்-ஆதி.

பல்லவி

உன்னுடரூபங்கட்கு உயர்வேஜயமங்களம் — உன்

அநுபல்லவி

பன்னகாசயனஉந்தன் பதும்மலரடிக்கு — உன்

சரணம்

1 நவமணிமாலையோடு நற்துளாய்ப்பூண்டதிவ்ய — உன்
2 புவிமாந்தர்பாவம்நீக்கி பொன்னடிநிழலைத்தாரும் — உன்
3 சேஷகிரிமீதில்வாசா ஸ்ரீசாபாண்டுறங்கேசா — உன்

மஹாசாத்வீமணியும் பதிவிரதா திலகமுமான
சக்குபாய் சரித்திரம் ஹரிகதை, முற்றிற்று.

வரை நாடக ரூபமா யிதுவரை அச்சிட்ட புத்தக

ந்தனர் சரித்திரம் —டிராமா

5-ஆக்டுகளும் 16-சீன்களு முடையது.

இதில் ஒவ்வொரு சீனிலும் ஸ்டேஜியில் நடத்தும்படி

ஆக்டைப்போல் சீன்விபரமும் திருவுருபடங்கள் சேர்த்திருக்கிறது.

இந்த நந்தனர் சரித்திரம் தி. நாராயணசாமி பிள்ளை கம்பெனி ம-ா-ஸ்ரீ கே. சீனிவாசப்பிள்ளை அவர்களாலும், ம-ா-ா-ஸ்ரீ, வி. கன்னையா கம்பெனியாரும் மாஸ்டர் எஸ். ஜி. கிட்டப்பாவினலும் ஒவ்வொரு தேசங்களிலும் நாடகமாக நடத்தி சகல ஜனங்களையும் ஆனந்தசாகரத்தில் மூழ்கச்செய்தது; ஆதலின் டை புத்தகத்தை அச்சிலிட்டு சகலருக்கும் விளம்பரமாகும்படி அனேகர் கேட்டுக்கொண்டதின் பேரில் அச்சிட்டிருக்கிறோம்.

இதில் நந்தனர் ஒவ்வொரு இடங்களில் சிவபெருமானை தியானித்து பாடும் பாட்டுகள் பரவசமா யிருக்கும். வேதியருக்கும் புலையருக்கும் நடக்கும் தர்க்கம், நந்தனருக்கும் வேதியருக்கும் நடக்கும் தர்க்கம் வேதாந்த சித்தாந்த இன்பமொழிகள் மனதைக் கவரச்செய்யும். நாடகம் கற்றுக்கொள்ளவும் வெகு சுலபமானது.

நந்தனர் சரித்திர டிராமா புஸ்தகம் 1-க்கு விலை அணு 6.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரால் எழுதப்பட்ட

சீகாளத்தி புராணம் வசனம்.

இப்புராணத்தை படித்து புத்தகத்தை கையில வைத்துக்கொண்டு காளத்தி க்ஷேத்திரத்திற்குப்போய் அங்குள்ள தீர்த்த மகாத்மியங்களும், அங்கு பக்தர்களுக்கு பரமசிவன் மோக்ஷமளித்த விவரம் யாவும் தத்ரூபமாய் காணலாம் இது எல்லோரின் விருப்பத்தின்படி மேற்படி முதலியாரால் எழுதப்பட்டு ஆயிரம் கணக்கான புத்தகங்கள் செலவாகி வருகிறது. இதை ஒருதரம் வாசித்தால் இதனால் உண்டாகும் பலன் உங்களுக்கே விளங்கும்.

சீகாளத்தி புராணவசனம், ஐந்து திருவுருப்படங்களுடன் விலை அணு 6.

மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனியிலும், ஆலந்தூர் கம்பெனியிலும், ம-ா-ா-ஸ்ரீ, கே. சீனிவாசப்பிள்ளை யவர்கள் கம்பெனியிலும், நடித்துவரும்

புல்புல் அயான் என்னும

பாதுஷா - ஜமீலா சரித்திரம்.

ரெயில்வண்டி பாளத்தில்விழும் சரித்திரம் (டிராமா) விலை அணு—4.
இதில் ஆங்காங்கு தர்க்கபாட்டுகள் ரமணீயமாயிருக்கும் இதுவரை அச்சில்லாதது

சந்திரஹாஸன் சரித்திரம்

இது ஓர் புத்திபுகட்டும் சிங்கார நாடகம்.

இதில் சந்திரஹாசன் திக்கற்றவனாய் பிச்சை எடுக்கும் துக்கமான ...ம், துஷ்டபுத்தியினால் அநேக துன்புற்று கொலையாளிகளால் விறல் ...தும், குந்தலதேசம் சேர்ந்து வளர, துஷ்டபுத்தி பொறாமைக்கொண் ...ஷத் கொடுக்கச்சொல்லி எழுதியனுப்ப தற்செயலாய் விஷை என்ப ...த்தி கலியாணம் நடப்பதும், பிறகு கேரளராஜன் குமார்த்தியை ம ...ஜ்யம் பட்டம் கட்டிக்கொள்வதும் ஆங்காங்கு தர்க்கப்பாட்டுகள் வீரம் சி ... முதலியன பொருந்தியிருக்கும் நாடகம் கற்றுக்கொள்பவருக்கு மிகவும் அ...மானது, டை கம்பெனிகளில் இந்நாடகத்தை நடத்த பார்த்தவர்களுக்கு இந்...த்தின் பெருமை விளங்கும். புத்தகம் 1-க்கு விலை அணு 0...

எமது விலாசம்:— T. ஸ்ரீனிவாச அண்டு கோ

நெ. 20, கம்மாளன்வார் தெரு முதல் சந்து ...

ஒருதரம் இத்தைலத்தை வாங்கி தலைக்கு தடவி பரிக்ஷித்துப் பார்த்து
அதன் பிறகு உமது பந்து மித்திரர்களுக்கு சிபார்சு செய்யுங்கள்.
எமது கம்பெனியில் தயார் செய்யப்பட்டு
ஆயிரக் கணக்கான டப்பிகள் விற்பனைசெய்து
அநேக சர்டிபிகேட்டுகள் பெற்று ஈற்கியாதிபெற்று உலவிவரும்

சுகந்த பரிமள வாசனை கூந்தல்வளரும்

'மனோரஞ்சன்' தைலம்

5-பலம் எண்ணை 2-இறைமுடன் டப்பி 1-க்கு விலை ரூ. 1.
ஆக மொத்தம் தபால் செலவுடன் டப்பி 1-க்கு விலை ரூ. 1-6-0.

இத் தைலத்தை வாங்குவோ(ரு)க்கு அத்துடன் அழகிய தங்கச்பூ 1, ஸ்திரீகள் தலையில் அணியக்கூடிய பட்டு ரோஜா கொண்டைப்பூ 1, ஆக இரண்டு சாமான்கள் இனாமாக கொடுக்கப்படும்.

இத்தைலத்தில் அருமையான பரிமள வாசனை திரவியங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றபடியால் தடவிக்கொண்டால் அக்கம்பக்கமிருப்பவர்களுக்கும் அதின் மணம் வீசும் கூந்தலை நீளமாக வளரச்செய்யும் தலையில் சூட்டினுடைய கொதிப்பைத் தணியச்செய்து கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பலவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்களில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தேக எரிச்சல், சொறி சிரங்கு, [illegible] மறதி, இவைகளைப் போக்கடித்து [illegible] ஆரோக்கியத்தைத் தந்து வாச[illegible]க்கும் மூர்த்தேஜஸ் உண்டாக்கும் மிக்க உயர்ந்த தைலம். [illegible] [illegible] விடாது வியாபாரம் செய்துவரும் கம்பனியின் வேண்டுகோளுக்கு [illegible] [illegible] சாஸ்திர யுக்தமாய் தயார்செய்து [illegible] [illegible] அனுப்பி நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றுள்ளது. ஒரு தடவை [illegible] [illegible] பார்த்தால் இதன் அருமை பெருமை விளங்கும். [illegible] [illegible] [illegible] சமமாய் தேன் [illegible] [illegible] சேர்த்துக்கொள்ளலாம்.

[illegible]ஸ்தலம்:—

T. [illegible] அண்டு கோ.,

நெ 20, தம்பசெட்டித்தெரு, முதல் சந்து,
ஜெனரல் பேட்டை போஸ்டு, சென்னை